விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :- 0212225392

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 17 வியாழக்கிழமை (02.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 195

# அன்றே சிறையில் அடைத்திருந்தால் இன்று பிரதமராக ஆசை வந்திராது

## அட்டைபோல் ஒட்டி இரத்தம் குடிக்க விடமுடியாது – சந்திரிகா



(கொழும்பு)

**நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியாக செயற்படுமாயின் இன்று பிரதமர் பதவி கேட்கும் நபர்கள் சிறையில் இருந்திருப்பர் எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மக்களால் தோற்கடிக்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்ந்தும் தமது குற்றங்களை மறைப்பதற்காக தொங்கிக்கொண்டு அரசியல் செய்ய இடமளிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதியின் 70-வது பிறந்த தினத்தை முன்னிட்டு நீர்கொழும்பு நகர சபையில் நேற்று நடைபெற்ற பார்வையற்றவர்களுக்கு உலர் உ[illegible]வு பொதிகளை வழங்கும் நிக[illegible] நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே சந்திரிகா இதனை கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனவரி 8-ம் திகதிக்கு பின் மக்கள் அமைதியாக வாழக்கூடிய நாடாக இலங்கையை மாற்றி புது சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளோம. ஆனால் முடிந்து போன சந்தர்ப்பத்தை மீண்டும் அழைத்து அழிவுக்குச் செல்ல சிலர் முயறசிக்கின்றனர். நாம் சரியாக செயற்பட்டிருந்தால் அவர்கள் சிறையில் இருக்க வேண்டும்.

சட்டம், நீதிமன்றம் சரியாக செயறபட்டால், குற்றம் செய்தவர்கள் இன்று பிரதமர் பதவி கேட்பவர்கள் என பலர் சிறையில் இருப்பர். அப்படி செய்யாதது ஐயோ பாவம் என்று அவர்களுக்கு 24 ஆம் பக்கம் பார்க்க....

# தேர்தலில் போட்டியிடுவதாக மகிந்த நேற்று அறிவிப்பு

## புதிய அரசை அமைப்பதாகவும் சூளுரைப்பு



(கொழும்பு)

**நாட்டின் முன்னேற்றத்துக்காக மக்களின் ஆணையை ஏற்று எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தேர்தலின் பின்னர் புதிய அரசு அமைக்கப்படுவதை யாராலும் தடுக்க முடியாது எனவும் சூளுரைத்துள்ளார்.**

நேற்று மெதமுலனவில் உள்ள அவரது வீட்டுக்கு முன்பாக நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையிலே, தேர்தலில் பேட்டியிடுமாறு மக்கள் அழைப்பு விடுத்திருக்கின்றனர். 24 ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் போனோர் விபரம் விரைவில்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதி கட்டப் போரின் போது காணாமல் போனவர்கள் மற்றும் படைத்தரப்பினரிடம் சரணடைந்தவர்கள் தொடர்பிலான விபரங்களை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் அரசாங்கம் இரண்டு மாதங்களில் தெரிவிக்கும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகை 24 ஆம் பக்கம் பார்க்க....

## இரண்டாம் தவணை விடுமுறையில் மாற்றம்

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம திகதி நடைபெறவுள்ள பொதுத்தேரதல் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகிய காரணங்களினால இரண்டாம் தவணை விடுமுறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய உயர்தர பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலைகள் தவிர்ந்து ஏனைய அனைத்து பாடசாலை 24 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தேர்தல் களத்தில் சந்திரிகா!

### ஓரிரு நாட்களில் முடிவு உறுதியாகும்

(கொழும்பு)

நாடா[illegible]மன்றத் தேர்தலில் ஐக்கிய [illegible]கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால், அவருக்கு போட்டியாக பிரதமர் வேட்பாளராக மற்றொரு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போட்டியில் குதிப்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியுமென்றால், அவருக்குப் போட்டியாக சந்திரிகா குமாரதுங்கவும் களமிறங்குவார் என்று அவரது செயலாளர் பி.திசநாயக்க கடந்த திங்கட்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இத்தேர்தலில் முன்னாள் 24 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவையும் அவர் வரலாற்றையும் மக்களே குப்பையில் எறிவர் - நவீன்

(கொழும்பு)



பெரிதுபடுத்திய நம்பிக்கையுடன் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ஆட்சேபித்துள்ளனர்.

இந்தநிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் மகிந்தவின் ஆதரவில்லாமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிக்கு கொண்டு செல்ல முடியும் என்றும் அந்த உறுபபினர்கள் நம்புவதாக கொழும்பின் ஊடகம் ஒன்று தெரிவிக்கிறது.

மகந்த ராஜபக்ஷவுக்கு குறைநதளவான ஆதரவே உள்ளது. எனினும் அவர்கள் தமக்கு அதிக ஆதரவு உள்ளதாக கற்பனை செய்கின்றனர். 24 ஆம் பக்கம் பார்க்க....

## த.தே.ம முன்னணி தனித்துப் போட்டி

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலை புறக்கணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

எனினும் யாருடனும் கூட்டணி சேராமால் தமது கட்சி தனித்தே போட்டியிடும் என அதன் பொதுச் செயலர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கொள்கை அடிப்படையிலேயே வடமாகாண 24 ஆம் பக்கம் பார்க்க....

**நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியை ஏற்க முடியாத மகிந்தவால் அதிகாரத்தை கைவிட முடியவில்லை

## அமைச்சர் ருவான் சுட்டிக்காட்டு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் அதிகாரத்தை கைவிட முடியவில்லை என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்து, மகிந்த ராஜ பக்ஷவின் ஆட்சியை முடிவுறுத்தி பீதியை இல்லாமல் செய்த போதிலும் மகிந்த ராஜ பக்ஷவினால் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாது ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்

கடந்த காலங்களில் பல்வேறு அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் காணப்பட்டது.

அரசியல் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படாது. வெள்ளைவான் கலாச்சாரத்தினால் மக்கள் பீதியில் உறைந்திருந்தார்கள் எந்தவொரு நபரும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த அனுமதிக்கப்படவில்லை ஆனால் இன்று மகிந்த ராஜபக்ஷவிற்கும் தனது நிலைப்பாட்டை சுதந்திரமாக வெளிப்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

நாம் 100 நாள் திட்டத்தை ஆரம்பித்ததே பொதுத் தேர்தலை நடத்தும் நோக்கிலேயே யாகும்.

பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது. எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கைச் சுமை குறைவடைந்துள்ளது.

ஆனால் மக்களுக்கு மேலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



மேலும் மகிந்த ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற காட்டும் பேராசையினால் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவடைந்துள்ளதாக ருவான் தெரிவித்துள்ளார். (செ-11)

# இன்றிலிருந்து தேர்தல் விசாரணைப் பிரிவு ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை இலக்கு வைத்து தேர்தல் விசாரணைப் பிரிவு இன்று முதல் இயங்க உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் திணைக்களத்தில் இந்த பிரிவு இன்று முதல் இயங்க உள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகங்களில் தேர்தல் விசாரணைப் பிரிவு இந்த மாதம் 6-ம் திகதி முதல் இயங்க உள்ளது.

தேர்தல் விசாரணைப் பிரிவுகள் பிரதேச செயலக மட்டத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் அந்தந்த பிரதேசங்களின் நிலைமைகளை கருத்திற் கொண்டு விசாரணைப் பிரிவுகள் நிறுவப்படும் என் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (செ-11)

# க.பொ.த உ/த பரீட்சைக்கு தோற்ற 3 இலட்சத்து 90 ஆயிரம் பரீட்சார்த்திகள் தயார்

## பரீட்சைக்கான புதிய அட்டவணையும் வெளியீடு

ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையில் 3 இலட்சத்து 90 ஆயிரத்து 69 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

பாடசாலையினூடாக 2 இலட்சத்து 36 ஆயிரத்து 72 பேரும் தனிப்பட்ட ரீதியில் 72 ஆயிரத்து 997 பேரும் தோற்றவுள்ளனர்.

கடந்த வருடத்தை விடவும் இம்முறை சுமார் 12 ஆயிரம் பரீட்சார்த்திகள் அதிகமாக தோற்றவுள்ளனர் என்றும் பரீட்சைக்காக 2 ஆயிரத்து 180 பரீட்சை மத்திய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 2015 கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான புதிய அட்டவணை www.doenets.lk இணைய தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதாகவும் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் பார்வையிட முடியும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகி 13ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் தொடர்ந்து 17ஆம் திகதி பொதுத் தேர்தலின் பின்னர் மீண்டும் 24ஆம் திகதி ஆரம்பமாகி செப்டெம்பர் 8ஆம் திகதியுடன் நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

# இளம் குடும்பப்பெண் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல்

## வீட்டில் தனித்திருந்த வேளை சம்பவம்

(குப்பிளான்)

தனிமையில் வீட்டில் இருந்த இளம் குடும்பப் பெண்னை இனந்தெரியாதவர்கள் தாக்கியதில் அவர் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் குப்பிளான் தெற்கு சந்திக்கு அண்மையாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்கப்பட்ட இவர் இரண்டாம் நாளான நேற்றும் மயக்கம் தெளியாத நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளின் தாயாரான திருமதி அ.செந்தில்குமார் (வயது 30) என்பவரே மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு இவர் வீட்டில் தனியாக இருந்துள்ளார். முன்பள்ளிக்கு விடப்பட்ட பிள்ளையை இவர அழைக்க வராத நிலையில் முன்பள்ளி ஆசிரியை வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார் எனவும் பதில் வராத நிலையில் பிள்ளையின் மாமியாருடன் தொடர்பு கொண்டு பிள்ளையை அழைத்து செல்லும்படி கூறியுள்ளார்.

முன்பள்ளிக்குச் சென்ற மாமியார் பிள்ளையை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு சென்ற வேளையில் வீட்டின் கதவுகள் திறந்த நிலையில் காணப்பட்டுள்ளன.

கூப்பிட்டும் பதில் வராத நிலையில் வீட்டில் தேடிய போது அறையொன்றில் இரத்தம் வடிந்த நிலையில் மயங்கிய நிலையில் குறித்த பெண் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லபபட்டு தற்போது வரை சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. சுன்னாகம் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (செ-11)

## கிழக்கில் போட்டியிடும் வேட்பாளர்கள் யார்?

# த.தே.கூட்டமைப்பு, மு.காங்கிரஸ் 6-ம் திகதிக்கு பின்னர் அறிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் உறுப்பினர்கள் தொடர்பான விவரங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு பின்னர் அறிவிக்கப்படவுள்ளதாக அவ்விரு கட்சிகளும் அறிவித்துள்ளன.

இது தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் ப்ா.அரியநேத்திரன், தெரிவிக்கையில், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழமைப்போல தனித்து இலங்கை தமிழரசுக் கட்சியில் வீடு சின்னத்திலேயே போட்டியிடவுள்ளது.

அந்த வகையில், இம்முறை கிழக்கு மாகாணம் சார்பில் போட்டியிடும் உறுப்பினர்கள் தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் விடுதலை இயக்கம் மற்றும் தமிழ் மக்கள் விடுதலை கழகம் ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து ஆராய்ந்து வருகின்றன.

வழமைப் போலவே, இத்தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் போட்டியிடவுள்ள நிலையில் மேலதிகமாக புதிய உறுப்பினர்கள் களமிறக்கப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டு இது தொடர்பான இறுதி முடிவை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

இதேவேளை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக களமிறங்க தாம் தீர்மானித்துள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தீர்க்கமான முடிவை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமே வழங்குவாரென வும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், கிழக்கு மாகாண சபையின் தற்போதுள்ள நிலையை கருத்திற் கொண்டே தேர்தலில் களமிறங்குவது தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்படும்.

எனவே, இது தொடர்பான தீர்க்கமான முடிவை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு பின்னர் அறிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

# வடக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிபர் இடமாற்றங்களை மீள்பரிசீலனை செய்யவும்

## மாகாண அமைச்சரிடம் விஜயகலா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாடசாலை அதிபர்களின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜாவிடம் ஐ.தே.க வின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் மகளிர் விவகார பிரதியமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் பல அதிபர்களுக்கு மாகாண அமைச்சர் இடமாற்றம் வழங்கியுள்ளார். இதற்கு எதிராக குறித்த பாடசாலைகளின் மாணவர் மற்றும் பெற்றோர்கள் போராட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளமை தொடர்பில் முன்னாள் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே நேற்று மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அவர், க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ளமையினாலும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளமையினாலும் இந்த இடமாற்றத்தக்கான உத்தரவினை மீள்பரிசீலனை செய்ய



வேண்டும் என கோரியுள்ளார்.

இந்த இடமாற்றத்துக்கான நேர்முகப்பரீட்சைகள் ஏற்கனவே நடைபெற்றதாகவும் இதற்கிணங்கவே இடமாற்றங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் மாகாண அமைச்சர் விளக்கமளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் மாணவர்கள், பெற்றோர் மத்தியில் அதிருப்தி நிலை காணப்படுகின்றது.

எனவே இந்த விடயத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று விஜயகலா மகேஸ்வரன் மாகாண அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார். (செ-11)


**A/L-2015 தொழில்நுட்பபிரிவு**

மாணவர்களுக்கான மாபெரும் விசேட கருத்தரங்கு SCI- Tec, Bio-Tec, Eng-Tec ஆகிய பாடங்களுக்கு அலகு ரீதியான மீட்டலும் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்களும் விசேட திறமை வாய்ந்த வளவாளர்களினால் மிக நுணுகி ஆராயப்படும்.

(50 மணித்தியாலத்திற்கு குறையாத நோக்கில்)

8-7-2015 இல் ஆரம்பமாக இருப்பதால் இடவசதி அச்சடிக்கப்பட்ட குறிப்புகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு 6-7-2015 இற்கு முன் காலை 8.00-2.00 மணிவரை உங்கள் பதிவுகளை D.M.I அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

(999) D.M.I - ஆரியகுளம் சந்திக்கு அருகில்



**விசேட அறிவித்தல்**

பொதுத் தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்கு அ.இ.சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் நிருவாகசபைக்கூட்டம் 05-07-2015ம் திகதி மு.ப 9.30 மணிக்கு தலைவர் திரு.மு.பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் யாழ்ப்பாண[illegible] வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பி.கே.[illegible]

பொதுக்காரியதரிசி

01-07-2015

(866)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் மகிந்தவை எதிர்கொள்வது எப்படி

## சந்திரிகா மந்திராலோசனை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் வேட்புரிமை வழங்கப்பட்டால் பொதுத் தேர்தலின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார்.**

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் களமிறங்குவதாக அறிவித்ததை தொடர்ந்து, ஐக்கிய தேசிய கட்சி, பிரபல அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு முன் நின்றவரும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக தீர்மானித்ததும் சந்திரிகா குமாரதுங்க என்பது குறிப்பிடத்தக்கது.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளராக' ஏற்றுக் கொள்ளவில்லை என ஜனாதிபதி ஊடக பிரிவு நேற்று முன்தினம் அறிக்கை ஒன்று வெளியிட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தேர்தலில் போட்டியிடுவதாக நேற்று அறிவித்திருந்தார்.

எனவே இவ்வாறான ஒரு நிலையின் கீழ் மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புரிமை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்தால்,

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கு ஆதரவு வழங்கிய ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அதிகாரத்தை கொண்ட கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கு ஜாதிக ஹெல உறுமய இணக்கம் வெளியிட்டிருந்தது.

எப்படியிருப்பினும் ஐக்கிய தேசிய கட்சி தனியாக தேர்தலில் போட்டியிடுவதற்கே இதுவரையில் தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நூல்வெளியீட்டு விழா

யாழ்.பல்கலைக்கழக இசைத துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீ.தர்ஷனனின், "நவீன உளவியல் மூலம் கர்நாடக இசைக் கல்வி" நூல் வெளியீட்டுவிழா இன்று வியாழக்கிழமை இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் தலைமையினை யாழ். இலக்கியக் குவியத் தலைவர் வேலணையூர்தாஸ ஏற்கிறார். பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்தியததுணைத்தூதர் ஏ. நடராஜன் கலந்து கொள்வதோடு, கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி முதுநிலைப் பேராசிரியர் நா.ஞானகுமாரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். மதிப்பீட்டுரையை அளவையூர் சிற்றம்பலம் சிவஞானராஜா வழங்குகிறார். சிறப்பு விருந்தினர்களாக, முன்னாள் இசைத்துறைத் தலைவர் கலாநிதி ந.வி. மு.நவரத்தினம், ஸ்ரீமதி. தர்ம பூபதி சிதம்பரநாதன், நடனத்துறைத் தலைவர் ஸ்ரீமதி. அருட் செல்வி கிருபைராஜா, சித்திரமும் வடிவமைப்பும் இணைப்பாளர் சி.சூரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பிக்கவுள்ளனர். (இ)

# 6 இலட்சம் ரூபா செலவில் மாதாந்தம் நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு உட் பட்ட நிலத்தடி நீரால் பாதிக்கப்பட்டிருக்கும் பகு திகளுக்கு மாதாந்தம் 6 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் விநியோகம் வழங்கப் பட்டு வருவதாக வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு உட்ப ட்ட பகுதிகளில் உள்ள கிணறுகள் நிலத்தடி நீரால் பாதிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு தொடர் ந்து குடிநீர் விநியோகம் மேற்கொண்டு வருகின்றோம். எரிபொருள் செலவுக்காக மட்டும் 6 இலட்சம் ரூபாய் செலவாகின்றது.

இதன் காரணமாக பிரதேச சபையால் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் பல தடைப்பட்டு இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மரண அறிவித்தல்

## தலையசிங்கம் காஞ்சனமாலா (வவாச்சி)



கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட தலையசிங்கம் காஞ்சனமாலா கடந்த 27.06.2015 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தலையசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை- சரஸ்வதியின் அன்பு மகளும் கந்தன்- சின்னாச்சியின் பாசமிகு மருமகளும் தவப்புதல்வன், சுபாசினி, சுபாசங்கர், சுகந்தினி, சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இரத்தினமாலா, சந்திரவதனா, விமலாதேவி , ரஞ்சிதாதேவி, பரராஜசிங்கம் துரைராணி, ரதிதேவி, தவராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.07.2015 இன்று வியாழக்கிழமை இலங்கை நேரப்படி மதியம் 1.00 தொடக்கம் 3.00மணிவரை டென்மார்க்கில் நடைபெறும்.அத்துடன் அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் அவரது சொந்த ஊரான கோண்டாவிலில் இன்று நடைபெறும்.

கோண்டாவில் வடக்கு ,
கோண்டாவில்.

குடும்பத்தினர்
021 205 3717

# முன்னாள் போராளிகள் ஒன்றுகூடி ஆராய்வு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் நெருங்கிவரும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் முன்னாள் போராளிகளும் அவர்களது ஆதரவாளர்களும், நலன்விரும்பிகளும் ஜனநாயகக் கட்டமைப்பு ரீதியாக தாம்ஆற்றவிரும்புகின்ற - தாம் ஆற்றக்கூடிய -பங்கு பணி குறித்து ஒன்றுகூடி ஆராயவிருக்கின்றனர்.

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் ஒருவரின் ஒருங்கிணைப்பில் வடமாகாணத்தில் உள்ள முன்னாள் சிரேஷ்ட போராளிகள் பலர் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இராசி பலன்

02.07.2015

(ஆனி 17, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பூரணை முற்பகல் 8.42 மணிவரை
பூராடம் பின்னிரவு 3.59 மணிவரை
இராகுகாலம் 1.26-2.56மணிவரை
சுபநேரம் 7.26-8.56 மணிவரை

வளவன்

**இன்றைய கிரக நிலை**

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சூரி புதன்,செவ் |
| | இன்றைய கிரக நிலை | | குரு சுக் |
| | | | |
| சந் | | சனி | ராகு |

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**மேடம்:** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், தடைகள் அகன்று தனவரவுகள் பெருகும் நாள், தொழில் ரீதியாக மறைமுக போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்:** மனக்குழப்பம் தீர அம்பிகையை வழிபடவேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பிறருக்காக பொறுப்புக்கள் சொல்வதை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** நண்பர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், ஆரோக்கியமான நாள்.

**மகரம்:** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணத்தால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செலவுகள் கூடும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்டநாளைய...கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், தனவரவு திருப்திகரமாக அமையும், [illegible] ரித்துச் செய்வது நல்லது.

**துலாம்:** எடுத்த காரியத்தை முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, [illegible]ன நன்மையுண்டு.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறப்பும், பெற்றோரின் பாசமழையில் திகழ்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1068 பக்கங்களில் என்ன இருக்கிறது?

கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரை, நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், சாட்சிகளின் உண்மைத் தன்மையைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் சட்ட விதிமுறை. ஆனால், இந்த வழக்கில் அதை மீறி, வருமானவரி அதிகாரிகள் அளித்த சான்றுகளின் அடிப்படையில் நீதிபதி குமாரசாமி கணக்குப் போட்டுள்ளார்.

**பரிசுப்பொருள் மூலம் வந்த வருமானங்கள்**

ஜெயலலிதாவுக்கு 1 கோடியே 50 லட்சம் ரூபாய் வருமானம் அவருடைய 44 ஆவது பிறந்த நாளுக்குப் பரிசுப்பொருளாகக் கிடைத்துள்ளது. அதில் தவறில்லை என்று நீதிபதி குமாரசாமி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.


குன்ஹா


குமாரசாமி



ஆனால், இந்த விவகாரத்தில், சி.பி.ஐ லஞ்ச ஊழல் தடுப்புச் சட்டம் 1988 இன்படி ஒரு பொது ஊழியர் பரிசுப் பொருள் பெறுவது குற்றம் என்று வழக்குத் தொடுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

ஆனால், அந்த வழக்கை காலம் கடந்து தொடுக்கப்பட்ட வழக்கு என்று சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. சி.பி.ஐ சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, இந்த நீதிமன்றத்தில் (உச்ச நீதிமன்றத்தில்) வழக்குத் தொடுத்துள்ளது. அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த விவரங்கள் எதையும் எதிர் தரப்பினர் உயர் நீதிமனறத்தில் தெரிவிக்காமல் மறைத்து விட்டனர்.

ஊழல் தடுப்புச் சட்டம் 13 (1) (ந), ஒரு பொது ஊழியர் பெறும் பரிசுப் பொருள்கள் பற்றிய விவரங்களை உரிய முறையில் தகவலாக சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரிவிக்க வேண்டும் என்கிறது.

ஆனால், இந்த வழக்குத் தொடுக்கப்படும் வரை, ஜெயலலிதா, தான் பரிசுப் பொருள் பெற்ற விவரத்தை அரசாங்கத்துக்குத் தெரிவிக்கவில்லை. இதுதொடர்பாக சி.பி.ஐ வழக்கு நிலுவையில் இருக்கும் விவரத்தையும் நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கவில்லை.

**சசி என்டர்பிரைஸஸ்**

சசி என்டர்பிரைஸஸ் நிறுவனத்திலிருந்து தங்களுக்கு 95 இலட்சம் வருமானம் வந்தது என்று எதிர்தரப்பு தெரிவித்தது. அதில் வாடகை வருமானம் தனியாக 12 இலட்சம் ரூபாய் கிடைத்தது என்றும் தெரிவித்தது.

ஆனால், அரசுத் தரப்பு 6 லட்சம் ரூபாயைக் கணக்கில் எடுத்துக்கொண்டது. ஆனால் இரண்டு தரப்பு சொனதற்கும் ஆதாரமாக எந்த ஆவணங்களையும் சிறப்பு நீதிமன்றத்தில் இருவராலும் சமர்ப்பிக்க முடிய வில்லை. அதனால், சிறப்பு நீதிமன்றம் அந்தத் தொகையை தள்ளுபடி செய்துவிட்டது.

ஆனால், உயர் நீதிமன்ற நீதிபதி, அதைக் கணக்கில் கொள்ளாமல் வெறும் யூகத்தின் அடிப்படையில் சசி என்டர் பிரைஸஸ் நிறுவனத்திலிருந்து குற்றவாளிகளுக்குக் கிடைத்த வருமானம் என்ற வகையில் 25 இலட்சம் ரூபாயை எடுத்துக் கொண்டுள்ளார்.

ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் நமது

**எம்.ஜி.ஆர் வருமானம்**


நமது எம்.ஜி.ஆரிலிருந்து தங்களுக்குக் கிடைத்த வருமானம் ஒரு கோடியே 15 லட்சம் என்று ஜெயலலிதா சசிகலா இருவரும் எழுத்துப்பூர்வமாக நீதிமன்றத்தில் ஒத்துக்கொண்ட நிலையில், உயர் நீதிமன்ற நீதிபதி நமது எம்.ஜி.ஆரில் இருந்து அவர்களுக்குக் கிடைத்த வருமானம் என்று 4 கோடி என்று கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளார்.

தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய அவர்களே சொன்ன வருமானத்தைக் காட்டிலும், நீதிபதி அவர்களுக்குச் சாதகமான வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளார். அதுவும் காலம் கடந்து பல ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்ட வருமானவரி ஆவணங்களின் அடிப்படையில் இதை நீதிபதி எடுத்துக் கொண்டுள்ளார்.

ஆனால், நமது எம்.ஜி.ஆர் திட்டம் மற்றும் அதன் சாட்சிகள் அளித்த வாக்குமூலத்தில் இருந்த நம்பகமற்ற தன்மை மற்றும் அந்தத் திட்டத்தில் இருந்த போலித் தன்மை ஆகியவற்றை கருத்தில்கொண்ட சிறப்பு நீதிமன்ற நீதிபதி, 'இந்தத் திட்டம் போலியானது. இதில் சொன்ன சாட்சிகள் பிறழ்சாட்சிகள்' என்றும் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**சூப்பர் டூப்பர் டி.வி**

சூப்பர் டூப்பர் டி.வி மூலம் தனக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைத்ததாக சுதாகரன் தெரிவித்தார். ஆனால், சூப்பர் டூப்பர் டி.வி மூலம் சுதாகரனுக்கு கிடைத்த வருமானம் என்று அரசுத் தரப்பு 9 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டது. ஆனால், எந்த ஆவணங்களையும் பரிசீலிக்காமல், சுதாகரன் சொன்னதையே நீதிபதி கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளார்.


சசிகலா


இளவரசி


சுதாகரன்

**சொத்துகள்...**

அசையா சொத்துகள் மொத்தம் 146 என்று சிறப்பு நீதிமன்றம் கணக்கிட்டுள்ளது.



ஆனால், அதில் எந்தவிதமான குறையும் இல்லாத நிலையில் 49 சொத்துகளை எந்தக் காரணமும் இன்றி நீதிபதி குமாரசாமி நீக்கிவிட்டார்.

எதற்காக அவற்றை நீக்கினார் என்று அவர், அவருடைய தீர்ப்பில் எந்த இடத்திலும் விளக்கவில்லை. வெறும் 97 சொத்துகளை மட்டும் கணக்கில் கொண்டுள்ளார்.

மேலும், அந்தச் சொத்துகளின் மதிப்பாக எதிர்தரப்பு நீதிமன்றத்தில் ஒத்துக்கொண்ட தொகையே 16 கோடி. ஆனால், உயர் நீதிமன்றம் வெறும் 6 கோடி ரூபாயை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது.

இதுபோன்ற குளறுபடிகளால், எதிர்தரப்பு முறைகேடான வழிகளில் சம்பாதித்த சொத்துகளாக ஆதாரப்பூர்வமாக அரசுத் தரப்பு நிரூபித்த 60 கோடி ரூபாயை, நீதிபதி குமாரசாமி வெறும் 37 கோடி ரூபாய் என்று குறைத்துக் காட்டியுள்ளார். - இவ்வாறு பட்டியல் போட்டுள்ளது அப்பீல் மனு. நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பை வரிக்கு வரி விமர்சித்து இந்த மனுவைத் தயாரித்துள்ளார் அரசு வழக்கறிஞர் ஆச்சார்யா. தமிழக அமைச்சர்களுக்கு மீண்டும் கோயில் வேலைகள் காத்திருக்கின்றன என்று கிண்டல் அடிக்கிறார்கள் கர்நாடக வழக்கறிஞர்கள்

**-ஜூனியர் விகடன்-** (முற்றும்)

## அதிசய உலகம்

**பயணத்தை தொடங்கியது "சூரிய சக்தி"யால் இயங்கும் விமானம்**

சூரிய சக்தியால் மட்டும் இயங்கும் விமானத்தை சுவிஸ் நாட்டை சேர்ந்த விமானிகள் வெற்றிகரமாக வானில் செலுத்தியுள்ளனர். கடந்த 13 ஆண்டுகளாக சுவிசை சேர்ந்த Andre Borschberg மற்றும் Bertrand Piccard என்ற விமானிகள் சூரிய சக்தியால் இயங்கும் விமானம் குறித்து ஆய்வு நடத்தியுள்ளனர்.

இதன் முடிவாக துளி அளவு கூட எரிபொருளை பயன்படுத்தாத வகையில், தற்போது Solar Impulse 2 என்ற விமானத்தை உருவாக்கினர். கடந்த சனிக்கிழமை அன்று வானில் செலுத்தப்பட இருந்த இந்த விமானம், மோசமான காலநிலையால் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.




அபுதாபியில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த இந்த விமானம், இன்று காலை 07.12 மணியளவில் அங்குள்ள Bateen Executive விமான நிலையத்திலிருந்து தனது வரலாற்று பயணத்தை தொடங்கி யது. சுமார் 5 மாதங்களு க்கு உலகத்தை வலம் வரும் இந்த சோலார் விமானத்தை, அதனை உருவாக்கியவர்களில் ஒருவரான Andre Borschberg என்ற விமானி இயக்குகிறார்.

மேலும் விமான பயண திட்டமிட்டப்படி, அபுதாபியிலிருந்து கிளம்பியுள்ள அந்த விமானம் ஓமனில் உள்ள மஸ்கட் நகர விமான நிலையத்திற்கு சென்றடையவுள்ளது.

மஸ்க்கட்டிலிருந்து 35 ஆயிரம் கிலோ மீற்றர் பயணத்தை தொடங்கி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வரை சீனா, இந்தியா, பர்மா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் வழியாக உலகின் பல நகரங்களுக்கு பறக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த பயணத்தை குறித்து Andre Borschberg விமானி பேசுகையில், இது மனித குலத்திற்கு அமைந்துள்ள மிகப்பெரிய சாதனை என்றும் இந்த பயணத்தை வெற்றிகரமாக சாதிப்பேன் எனவும் பேசியுள்ளார். மேலும், பசுபிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களுக்கு மேல் தொடர்ந்து 5 நாட்கள் பறக்க உள்ளதால், அந்த பயணம் மிகப்பெரிய சவாலாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். சுவிஸ் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் நிதியுதவியுடன் வெற்றிகரமாக தொடங்கியுள்ள இந்த பயணம் குறித்து அந்நாட்டின் வெளிவிவகார துறை அமைச்சர் Didier Burkhalter அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் மனித குலத்திற்கு சாத்தியமில்லாததாக நம்பப்பட்ட ஒரு கனவை, சுவிஸ் விமானிகள் வெற்றிகரமாக உண்மையாக்கியுள்ளதாகவும், இந்த மகத்தான பயணம் முழு வெற்றி அடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சமைப்போம் சுவைப்போம்

### எக் கட்லட்



**தே.பொருட்கள்:**

முட்டை - 5,
உருளைக்கிழங்கு - அரைக்கிலோ,
வெங்காயம் - 1, தேங்காய்பால் - அரை கப்
மிளகாய்தூள், மசாலாதூள், மிளகுதூள் - 1 தேக்கரண்டி, மைதா - 2 தேக்கரண்டி,
எண்ணெய் - 250 கிராம்.

**செய்முறை**

முட்டை, உருளைக்கிழங்கை ஆகியவற்றை வேகவைத்து தோல் எடுக்க வேண்டும். முட்டையை இரண்டாக வெட்ட வேண்டும். ஒரு முட்டைய்யை சிறிது உப்பு மிளகு போட்டு கலக்கி வைக்க வேண்டும். வெங்காயத்தை மிக பொடியாக நறுக்க வேண்டும். உருளைக்கிழங்கை கட்டியில்லாமல் மசித்து அதனுடன் தேங்காய் பால், வெங்காயம், மைதா போட்டு நன்கு பிசைந்து சின்ன உருண்டைகளாக உருட்டி வைக்க வேண்டும். அதனை கையில் வட்டமாகத் தட்டி நடுவில் முட்டையை வைத்து மூட வேண்டும். அதனை கலக்கி வைத்த முட்டையில் நனைத்து ரொட்டிதூளில் நனைத்து எண்ணெயில் போட்டு இருபுறமும் சிவக்கவிட்டு எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமாகாண அனைத்து பிரதேச் செயலகங்களையும் சேர்ந்த சமூக சேவைகள் அலுவலர்கள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் அண்மையில் கண்டி பொல்கொல்லை கூட்டுறவு பயிற்சி கல்லூரியில் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டபோது...

# தேர்தல் விதிமுறைகளை மீறி 1600பேர் தொழில் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு

(கொழும்பு)

**நாட்டில் தொழில் வாய்ப்புக்களை அமைச்சர்கள் ஊடாக வழங்குவதன் மூலம் ஐக்கிய தேசியக்கட்சி தேர்தல் சட்டத்தை மீறுகிறது என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்**

தேர்தல் செயலகத்தில் இது தொடர்பிலான முறைப்பாட்டை செய்த பின்னர் செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர், தொழில்களுக்கான எந்த தகுதிகளையும் பாராது ஐக்கிய தேசியக்கட்சி தொழில்களை



வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார் .

இதன்காரணமாக அரச நிறுவனங்களின் அதிகாரிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். எனவே தேர்தல்கள் ஆணையாளர் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று தினேஸ் தெரிவித்தார்.

தகவல்களின்படி ஜூலை 8, 9 ஆம் திகதிகளில் 1200 பேர் நேர்முகப்பரீட்சைகளுக்கு அழை க்கப்பட்டுள்ளனர்.

ஜூலை 3, 4ஆம திகதிகளில் 400 பேர் அமைச்சுக்களின் நேர முக பரீசைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று இதன்போது தகவல் வெளியிட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும குற்றம் சுமத்தினார். (இ-7)


**வாடகைக்கு**

யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக K.K.S. Road இல் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு: 077 449 3222**

நிறுவனத்திற்கும் கொடுக்கப் படும்.

**டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)
தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்


# பாலியல் கொடுமைக்குள்ளான பெண்ணை சமரசமையத்திற்கு அனுப்பியது தவறுதான்

## உச்ச நீதிமன்றம் கண்டனம்

(டில்லி)

பாலியல் வன்கொடுமைக்குள்ளான பெண்ணை, சமரச மையத்திற்கு அனுப்ப உத்தரவிட்டது தவறு என்று கூறியுள்ள இந்திய உச்ச நீதிமன்றம், இது பெண்ணின் கண்ணியத்திற்கு எதிரானது என கண்டித்துள்ளது.

கடலூர் மாவட்டம், விருதாச்சலத்தைச் சேர்ந்த மோகன் என்பவர், கடந்த 2009ஆம் ஆண்டில் 17 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்துக்காக, கடலூர் மகளிர் நீதிமன்றம் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை, ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் விதித்துத் தீர்ப்பளிததது. இதை எதிர்த்து மோகன் உயர் நீதிமன்றத்தில் மனுதாககல் செய்தார். அந்தப் பெணணுக்கு குழந்தை பிறந்து டி.என்.ஏ. பரிசோதனையில் மோகன்தான் தந்தை என்று நிரூபணமாகியுள்ளது.

இந்நிலையில், 'அந்தப் பெண்ணின் சம்மதத்துடன் தான் உறவுகொண்டேன்" என மோகன் கூறியிருந்தார். இவருடைய மனுவை விசாரித்த நீதிபதி தேவதாஸ், 'பிறந்த குழந்தையின் எதிர்காலம் கருதி, பாதிக்கப்பட்ட பெண்ணுடன் மோகன் சமரச பேச்சு வார்த்தை நடத்தவேண்டும்" என்றபடி சமரச மையத்துக்கு பரிந்துரைத்திருப்பதோடு, அவருக்கு நிபந்தனைபிணை வழங்கி தீர்ப்பளித் தார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை நேற்று விசாரித்த உச்ச நீதிமன்றம், பாலியல் வன்கொடுமைக்குள்ளான பெண்ணை, சமரச மையத்திற்கு அனுப்ப உத்தர விட்டது தவறு என்றும், இது பெண்ணின் கண்ணியத்திற்கு எதிரானது என்றும் தெரிவித்துள்ளது.

மேலும், குற்றவாளியுடன் சமரசம் என்பது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த மென்மையான போக்கு என்றும் உச்ச நீதி மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 31 செவ் 8 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/867 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 49 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1570 |
| பிறப்பு: 1962 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 38<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ லண்டன்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/869 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:29 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/1572 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 61 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில் A/L அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/870 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1574 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 22<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: B/878 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 56<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1579 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



**அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்**
**மஹோற்சவ தின மஞ்சத் திருவிழா**



12ஆம் திருவிழா
இன்று 02.07.2015 வியாழக்கிழமை
காலை 1008 சங்குகளால் விசேட
அபிஷேகம் இடம்பெறும்.
மாலை 6.30க்கு வசந்தமண்டபப்பூசை
இடம்பெற்று 8.00மணிக்கு ஆறுமுகப்
பெருமான் வள்ளி,தெய்வானை சமேதரராய்
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட
உலகப்பெருமஞ்சத்தில் வீதிவலம் வரும்
காட்சி இடம்பெறும்.(இணுவைக் கந்தனின்
நிகழ்வுகளை இம் முகப்புத்தக பக்கத்தினூ
டாக அறிந்து கொள்ளலாம்.
(www.Facebook.com/Inuvaikantan)
அனைத்து அடியவர்களையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
12 ஆம் திருவிழா உபயகாரர்
(சி-1389)



# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். சங் கானை சிவப்பிரகாச மகா வித தியாலய கற்றல் உப கரணக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3 மணிவரை பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் தலைமையில் ஆரம்பமாகும் இக் கண்காட்சியின் முதல்நாள் நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜயேந்திர சர்மாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.சிவகு மாரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவெட்டி தச்சன்தோப்பு விநாயகர் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்ற போது.. (படம்: கரணவாய் செய்தியாளர்)

# விஞ்ஞானம், பொறியியற்றுறைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறைக்கான அடிப்படைக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.க. பொ.த. சாதாரணதரத்தில் ஆறு பாடங்கள் உள்ளடங்கலாக கணித மற்றும் விஞ்ஞான பாடங்களில் திறமைச்சித்தி பெற்ற அனைவரும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும். மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் கணித மற்றும் விஞ்ஞான துறையில் கற்று மூன்று பாடங்களிலும் சித்தியடையத் தவறியவர்களும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கற்கை நெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும் 155ம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி, 4ஆம் வட்டாரம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் இடம்பெறும். விண்ணப்பபடிவங்களை 23.06.2015 முதல் 22.07.2015 வரை யாழ்.பிராந்திய நிலையத்திலும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கற்கை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-3)

### கல்லுண்டாய் கழிவுகளை அகற்ற

# நவீன தொழில்நுட்ப முறைமையிலான பொறிமுறை அறிமுகப்படுத்தப்படும்!

(யாழ்ப்பாணம்)

**கல்லுண்டாய் வெளிப்பகுதியில் கொட்டப்படும் திண்ம, திரவக் கழிவுகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப முறையிலான பொறிமுறை ஒன்றை செயற்படுத்தவுள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரசபையின் திரவக் கழிவகற்றல் செயற்பாடானது நாளாந்தம் 80 ஆயிரம் லீற்றர் தொடக்கம் ஒரு இலட்சம் லீற்றர் கழிவுகளை அகற்ற வேண்டிய நிலையில் உள்ளது.

பொதுச்சந்தைகள், பொது இடங்கள், குடியிருப்புக்கள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள், விடுதிகள், பேருந்து நிலையங்கள், சிறைச்சாலை, நீதிமன்றங்கள், அரச நிறுவனங்கள் போன்றவற்றின் மலக்கழிவுகள் தற்போது கல்லுண்டாய் வெளிப்பகுதியில் முறையானவிஞ்ஞானதொழில்நுட்ப முறையினை பின்பற்றப்படாது அகற்றப்படுவதால் இப்பகுதியினை அண்மித்த குடியிருப்பாளர்களும் கால்நடைகளும் ஏனைய உயிர் வாழ்வனவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றன.

உரிய ஒழுங்குகளை பின்பற்றாது கழிவுகள் அகற்றப்படுவதால் நோய்த் தொற்றுக்கள் ஏற்படுவதுடன் நீர் மாசடைவதற்கும் வாய்ப்பாக மாறி விடும் சூழ்நிலைகள் உருவாகின்றது.

எனவே மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து இடங்களினதும் திண்ம, திரவக் கழிவுகளை அழித்து எரிப்பதற்கு நவீன விஞ்ஞான தொழில்நுட்ப முறையிலான பொறிமுறையை உருவாக்கும் திட்டத்தினை தனியாரிடமிருந்து பெற்று அவற்றில் சிறந்த திட்டத்தை தெரிவு செய்து அவர்கள் ஊடாகவே அமுல்படுத்தவுள்ளோம்.

அச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு தனியாருக்கு 5வருட குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

மாநகர சபையினால் அகற்றப்படவேண்டிய பொதுச் சந்தைகள், பொது இடங்களின் திண்ம, திரவக் கழிவுகள் நாளாந்தம் சராசரியாக 20 ஆயிரம் லீற்றர் அகற்றப்பட வேண்டும். அதற்கான செலவுகள் லீற்றர் ஒன்றிற்கு ஒரு ரூபாய்வீதம் 20ஆயிரம்ரூபாய் செலவு ஏற்படும் மாதாந்தம் 0.6 மில்லியன் ரூபாய் செலவாகிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநகர சபைக்கு உட்பட்ட பொதுமக்களுடைய திண்ம, திரவக் கழிவுகள் உரியமுறையில் உரிய காலத்தில் அகற்றப்படுவதுடன் கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் பொதுமக்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தை கட்டுப்படுத்தமுடியும்.

அத்துடன் இத்திட்டத்தை தனியாருக்கு வழங்குவதன் ஊடாக சபைக்கு ஏற்படுகின்ற செலவுகள் குறைவதுடன் சீரான வினைத்திறனான சேவையை பொதுமக்களுக்கு வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## வகுப்பு ஆரம்பவிழாவும் கல்விக் கண்காட்சியும்

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் க.பொ.த. உயர்தர வகுப்பு ஆரம்பவிழா மற்றும் ஆரம்ப, இடைநிலைப் பிரிவுகளின் கல்விக் கண்காட்சி என்பன இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் ச.சத்யவரதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய வலயக் கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எ.எஸ்.சற்குணராஜா, கௌரவ விருந்தினராக பொலிஸ் திணைக்கள கணக்காளரும் பழைய மாணவர் சங்கச் செயலாளருமான அ.கலைச்செல்வன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-3)




# சட்ட மேதைகளை உருவாக்கவேண்டும்

## நீதிபதி கணேசராஜா தெரிவிப்பு

175 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட ஹாட்லி கல்லூரி கணிதத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் உலகப் புகழ்பெற்ற விற்பன்னர்களை உருவாக்கியது போலசட்டத்துறையிலும் ஜி.ஜி.பொன்னம்பலம், கியூ.சி. நடேசன், கியூ.சி. நவரட்ணராஜா போன்ற சட்ட மேதைகளை உருவாக்க வேண்டுமென பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தவும் சமூக விடுதலைக்காகவும் சட்டமேதைகளை உருவாக்கக்கூடிய தகைமையும் ஆற்றலும் ஹாட்லி கல்லூரி ஆசிரியர்களிடம் இருக்கிறது. கணிதத்துறையில் திறமைசாலிகளாக இருக்கும் மாணவர்கள் சட்டத்துறையிலும் சிறந்து விளங்க முடியும்.

அண்மைக்காலமாக மாணவர்களின் கல்வியை சிதைக்கின்ற புதிதாக எழுந்துள்ள போதைவஸ்துப் பாவனை மற்றும் சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்த எனது காலப்பகுதியில் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். தற்போது யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்றிருக்கும் நீதிபதி இளஞ்செழியனுக்கு எனது ஒத்துழைப்பையும் வழங்குகிறேன்.

இதேவேளை போர் நடைபெற்ற காலப்பகுதியில்கூட ஹாட்லி கல்லூரி கல்வியில் சிறந்த பெறுபேறுகளை பெற்றிருந்தது. இன்றைய அமைதியான சூழலில் மாணவர்களை முன்னையதைவிட சிறந்த பெறுபேறுகளை தேசிய மட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் சமூகவலைத்தளங்களை தவறான முறையில் எவரும் பயன்படுத்தக் கூடாது. அத்துடன் இணையத்தளங்களினூடாக குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக உறுதியான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் நீதிபதி தெரிவித்தார். (இ-3-60)

# முத்திரைத் தீர்வை நிதியிலிருந்து வலி.தெற்கில் 8வீதிகள் புனரமைப்பு

வலி.தெற்கு பிரதேச சபையால் 2010 ஆம் ஆண்டுக்கான முத்திரைத்தீர்வை நிதியில் இருந்து சபைக்குட்பட்ட 8 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி மேலதிக மாக சபைக்கு கிடைக்கும் நிதி யில் இருந்து செயற்படுத்தப்படும் திட்டத்தில் இந்த வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அந்த வகையில் ஏழாலை விவசாயவீதி, சுன்னாகம் மயான வீதி, சுன்னாகம் வரியப்புலம் வீதி, உடுவில் முருகமூர்த்தி வீதி, ஏழாலை கலையம்மன் வீதி, உடுவில் வாதனை வீதி, சுன்னாகம் தில்லைக்கட்டிவீதி, உடுவில் அம்பலவாணர் வீதி ஆகிய வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் குறைந்தது மூன்று வருட காலத்தைக்கொண்ட இளமாணிப்பட்டம் பெற்றபட்டதாரியாக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையின் சேவையிலுள்ள ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக அல்லது ஆசிரிய கல்வியியலாளராக இருத்தல் வேண்டும். அத்துடன் 2014.06.30 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நியமனம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறிக்குரிய அனைதது வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும் 155ம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி, 4ஆம் வட்டாரம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் இடம்பெறும். விண்ணப்பப்படிவங்களை 28.06.2015 முதல் 23.07.2015வரை யாழ். பிராந்திய நிலையத்திலும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கற்கை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாமென யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஐ.ம.சு.முன்னணியின்

# வேட்பாளர் குழுவின் தலைவராக மகிந்த

(கொழும்பு) —

**நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் குழுத் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பெயரிடுவதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

மைத்திரி -மகிந்தவை இணைக்கும் குழு நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்த போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிமால் சிறிபால டி சில்வா, அநுர யதர்ஷன யாப்பா, சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் இச்சந்திப்பில் இணைந்துள்ள நிலையில் மகிந்த ராஜபக்ஷ இன்றி தேர்தலுக்கு செல்வதன் மூலம் கட்சி அழிவடைய வாய்ப்புள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மகிந்த இன்றி தேர்தலில் களமிறங்கி தோல்வியடைந்து வீட்டிற்கு செல்ல தயாரில்லை எனத் தெரிவித்த நிமால் சிறிபால டி சில்வா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்ட முடியாதென தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு வாய்ப்பு வழங்கவில்லை என்றால் தான் அரசியலை விட்டு விலகுவதாக நிமால்சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

இதன் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கூட்டணி வேட்பாளர் குழுவின் தலைவராக பெயரிடுமாறு குறித்த குழுவின் உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர்.

இதற்கு பெரிய அளவிலான ஆதரவின்றி இணக்கம் வெளியிட்ட ஜனாதிபதி இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கலந்துரையாடிய பின்னர் தான் தெரிவிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் எனத் தெரிய வருகிறது. (இ-7)

# நாடாளுமன்றை கலைத்ததால் பூகம்பம் தவிர்க்கப்பட்டுள்ளது!

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் 20 என்ற பூகம்பம் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்தார் வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

20 என்ற பூகம்பம் ஏற்படுவதிலிருந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது. சிறிய கட்சிகளுக்கும், சிறுபான்மை சமூகங்களுக்கும்பாதிப்பாக விளங்கிய இந்த 20ஆவது திருத்தம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எழுப்பிய குரலினால்,அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் அமைச்சர் ராஜித போன்றோரினால் இனவாதியாக காட்டப்பட்டுள்ளார்.

இனத்தின் அரசியல் பாதிக்கப்படும் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை குரலை எழுப்பியது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கிடையில் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு, எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிரதமர் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனால் மகிந்தவின் அட்டகாசம் மீண்டும் வந்து விடுமோ என்ற பாரிய அச்சம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலை முஸ்லிம் சமூகம் சரியாக பயனபடுத்திக் கொள்ள வேண்டும.

1994ம் ஆண்டு நமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹும் எம்.எச்.எம்.அஸ்ரப் இந்த நாட்டின் ஆட்சியில், பிரதமரை, ஜனாதிபதியை தீர்மானிக்கும் சக்தியாக விளங்கினார்.

நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக வந்ததன் பின்னர் இரண்டு முக்கிய விடயங்களை கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்த நடடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன்.

அதில் பெண்கள் வெளிநாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண்களாக செலலககூடாது. அதை தடை செய்ய வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு இங்கேயே வாழ்வாதார தொழிலை ஏற்படுத்துவதற்காக முதலீடுகளை செய்து அவர்களுக்கான தொழில்களை ஏற்படுத்தி வருகின்றேன்.

அதே போன்று கிழக்கு மாகாணத்தில் வேலை வாய்ப்பில்லாமலிருக்கும் 3200க்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றேன் என மேலும் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாறூக் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளருமான யு.எல். எம்.என். முபீன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

ஷைலோ Sylo ஐஸ் கிறீம் Ice Cream
Sylo Natural Ice Cream
சுவையுடன் ஆரோக்கியம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு தகுந்த ஐஸ்கிறீம் வகைகளை தயாரித்து வழங்கும் எமது நிறுவனம் நயினாதீவில் அன்னை நாகபூஷணியின் திருவிழா காலத்தில் தற்காலிக விற்பனை நிலையத்தை அமைத்துள்ளோம். வனிலா, செக்லேட், ஸ்ரோபெரி, அப்பிள், பிளாக்கரண்ட, பட்டர்ஸ் கொச், கேசர், பிஸ்தா, சப்ரோன், புளூ வெரி, ராஸ்பெரி, பெப்பிமென்ட், பாதாம், புருட் அன்ட் நட்ஸ் மற்றும் Low sugar ஐஸ்கிறீம் மற்றும் மில்க் சொக் வகைகளை சுவைத்து மகிழ வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
Sylo Ice Cream

## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று பூங்காவனத் திருவிழா



### என் வேதனையை குறைத்து விடம்மா

தாயே நான் கேட்டவரம் தந்திடம்மா
நாளொரு வண்ணம் பொழுதொருவண்ணம்
கேட்காத வரம் இல்லையம்மா
நான் பட்ட துன்பம் போதும் அம்மா
நான் படாத துன்பம் இனி இல்லை தாயே
இந்த சொந்தம் பந்தம் வேண்டாம் தாயே
கேலிகள் எல்லாம் போதுமம்மா
கேட்டதெல்லாம் போதுமம்மா
பொறுத்திருந்து பார் மகளே என்றாய்
பொறுமையுடன் இருந்தேன் அம்மா
பொக்கிஷம் எனக்கு தந்தாய் அம்மா
நீ அரவ வடிவில் எனக்கு
அருள் வடிவாகினாய் அம்மா

வோ.கனகேஸ்வரி

### தேரிலின்று மனங்குளிரக் கண்டு

கறைசேர் காரியங்கள் கவலையை உருவாக்க
கடவுளே தஞ்சமென நம்பி
தரையும் பெருங்கடலும் தாண்டி வருமடியார்
தாயே நயினை நாகபூஷணியுனை
முறையாகத் தேரிலின்று மனங்குளிரக் கண்டு
மேன்மை பெறத் துதிக்கின்றார்
நிறைவும் நிம்மதியும் நித்தம் நிலவிட
நல்லருள் தருவாய் நீயே!

குளப்பிட்டி
க.அருமைநாயகம்

### ஆணவம் அழியட்டும்

இந்திரன் அமைத்திட்ட பீடமதில்
இருந்து நல்லாட்சி புரி நாகபூஷணி
துன்பப்பட்டு நாமுன்னை தேடடவே
எம் அகத்துள்ளிருந்து பேசுகின்றாயம்மா
ஆணவ காட்டேறியை அழித்து நீ
ஆன்மாக்கள் அகம் மகிழ்ந்து என்றும்
வஞ்சகம் பொறாமை களவு அகன்ற பூமி
காண வரம் அருள்வாயம்மா

க.லிஷான்
நயினாதீவு

### பாம்பணியில் பவனி வாராய்...

அலை கடலின் எழில் சூட்டும் அற்புத அரசியே –எம்
நிலை கண்டு வழிகாட்ட இன்னும் மனமில்லையோ?
தொலைதூரம் கடந்து புகழ் பாடிவரும் எம்மவரின்
கவலைகளைப் போக்கிவிட பாம்பணியில் பவனி வாராய்...

பொன் சுபா
சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பளை நகரப்பகுதியில்

# பொருட்கள் கட்டுப்பாட்டு விலையைவிட அதிகரித்த விலையில் விற்பனை

### நுகர்வோர் குற்றச்சாட்டு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பளை நகரப் பகுதியிலும் மற்றும் மக்கள் குடியிருப்பு பகுதிகளிலும் காணப்படுகின்ற வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் பொதுச் சந்தைகள் என்பவற்றில் கட்டுப்பாட்டு விலைகளைவிட அதிகரித்த விலைகளின் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதுடன் நிறை குறைவான பொருட்களையும் பழுதடைந்த பொருட்களையும் விற்பனை செய்து வருவதாக நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர்.**

இது தொடர்பில் நுகர்வோர் கருத்து தெரிவிக்கையில்,

பளை நகரப்பகுதி உட்பட கிராமங்கள் தோறும் உள்ள வர்த்தக நிலையங்கள், உணவுச்சாலைகள், பொதுச்சந்தைகள் என்பவற்றில் பொருட்கள் கட்டுப்பாட்டு விலையை விட அதிகரித்த விலையில் விற்கப்படுவதாக நுகர்வோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

உதாரணமாக ஒரு கிலோ நாட்டு அரிசி 78 ரூபா தொடக்கம் 90 ரூபாவாகவும் ஒரு கிலோ சீனி 90 ரூபாவாகவும் ஒரு கிலோ உருளைக் கிழங்கு 100 தொடக்கம் 180 ரூபாவாகவும் ஒரு கிலோ மா 85 ரூபாவாகவும் ரின்மீன் பல்வேறு வகைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


அத்தோடு இங்குள்ள உணவுச் சாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மேற்பார்வை செய்யாததன் காரணமாக பழுதடைந்த உணவுப் பொருட்கள், காலாவதியான குளிர்பானங்கள் மற்றும் உணவுப் பொருட்கள், பழுதடைந்த மீன்வகைகள் என்பன தாராளமாக விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிவதாக நுகர்வோரால் தெரிவிக்கப்படுகின்றது.

நிறுத்தல் அளவை கருவிகள் பிரதேச சபையினால் பரீட்சிக்கப்பட்டு முத்திரையிடப்படாத நிலை காணப்படுகின்றது.

மேற்படி தவறுகளை சுட்டிக்காட்டி வர்த்தகர்களிடம் கேட்கின்ற போது வர்த்தகர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையே வாக்குவாதங்களும் முரண்பாடுகளும் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

எனவே நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், பளை பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து திடீர் பரிசோதனைகளையும் ஆய்வுகளையும் மேற்கொண்டு தவறு இழைக்கின்ற வர்த்தகர்கள்மீது நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தி நுகர்வோர் நியாயமானவிலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டுமென பளை பிரதேச நுகர்வோர் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர். (2-15)






சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் குடிபோதைக்கெதிரான வாரத்தை முன்னிட்டு வவுனியா கிடாச்சூரி அரசினர் தமிழ்க்கவன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து நேற்று போதைப்பொருள் பாவனைக்கெதிரான பேரணியொன்றை முன்னெடுத்திருந்தனர். இப்பேரணியானது போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வை பிரதேச மக்கள் ,மாணவர்கள் ஆகியோருக்கு ஏற்படுத்தும் வகையில் பல்வகைப்பட்ட விழிப்புணர்வு சுலோகங்களைத் தாங்கியவாறு மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

## முதிரை மரக்குற்றிகளை ஏற்றி பயணித்த வாகனம் பறிமுதல்



சட்டவிரோதமான முறையில் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளைக் கடத்திச் சென்ற இரண்டு வாகனங்களின் சாரதிகளை கிளிநொச்சி பகுதியில் வைத்து நேற்று கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாங்குளத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற சிறிய கப்ரக வாகனத்தில் மறைத்து கொண்டு செல்லப்பட்ட சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரந்திராந்திகள் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட திடீர் சோதனையில் சிக்கின. வாகன சாரதியை கைது செய்த அதிரடிப்படையினர் திராந்திகளுடனான வாகனத்தையும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை, மாங்குளத்திலிருந்து சுமார் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை பாரவூர்தியில் மறைத்துக் கொண்டு சென்ற ஒருவரை, இயக்கச்சப் பகுதியில் வைத்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை பளைப் பொலிஸார் கைது செய்தனர்.

பாரவூர்தியையும் சாரதியையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர். (2)

## மடு அன்னையின் ஆடித்திருவிழா இன்று

மன்னார் மடு அன்னையின் ஆடித் திருவிழா திருப்பலி இன்று வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு, யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மடு திருத்தலத்தின் ஆடித்திருவிழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், கடந்த மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள் திருப்பலிகள் ஆரம்பமாகின.

தொடர்ச்சியாக நவநாள் திருப்பலிகள் இடம்பெற்றுவந்த நிலையில் இன்று வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மெண்டிஸ், அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்ராடி ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலியாக திருவிழா திருப்பலியை ஒப்புக் கொடுக்கவுள்ளனர். (2)

## வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டி

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டி -2015 எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வரை வவுனியா கல்வியியற் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என வடக்கு மாகாண கல்வித்திணைக்கள பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் அறிவித்துள்ளார். இதற்கமைய 2015 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுநர் போட்டியில் 13 வயது கீழ்ப் பிரிவு, 15 வயது கீழ்ப்பிரிவு , 17 வயது கீழ்ப்பிரிவு, 19 வயது கீழ்ப் பிரிவு 21 வயது கீழ்ப் பிரிவு ஆகிய வயது பிரிவுகளில் ஆண்,பெண் இருபாலாருக்குமான தடகளப் போட்டிகள் நடைபெற வுள்ளன.

இப்போட்டிகளில் பங்கு பற்றும் மாணவர்களுக்கானதங்கும்இடவசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில் யாழ்.மாவட்ட மாணவர்கள் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும் மாணவிகள் வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் மன்னார் மாவட்ட மாணவர்கள் வவுனியா சி.சி.ரி.எம் பாடசாலையிலும் மாணவிகள் வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்திலும் முல்லைதீவு மாவட்ட மாணவர்கள் வவுனியா இந்துக் கல்லூரியிலும் மாணவிகள் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்திலும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திலும் மாணவிகள் வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இத் தடகளப் போட்டிகளின் ஆரம்ப நாள் விழா வடக்கு மாகாண விளையாட்டுத் துறை அமைச்சு செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

தடகளப்போட்டி நிறைவு நாள் விழா வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாயகம் திரும்பும் ஈழக் குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

(மல்லாவி)

**நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதுகாப்பினை கருத்திற்கொண்டு இந்தியாவிற்கு சென்று நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த வேளை தம்பதியினருக்குப் பிறந்த குழந்தைகள் தற்போது தாயகம் திரும்பி யிருக்கும் நிலையில் அவர்களுக்கான இலங்கை பிரஜாவுரிமையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள ப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வடக்கு மாகாணத்தின் கீழுள்ள ஐந்து மாவட்டங்களிலும் இயங்குகின்ற நீதிமன்றங்களின் வளாகத்திலுள்ள இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவிற்கு சென்று தஞ்சம் அடைந்திருந்த நிலையில் தம்பதியினருக்கு பிறந்த குழந்தைகளுக்கான பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவையொன்று கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் இலங்கை கடவுச்சீட்டு காரியாலயத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவினர் ஆகியோர் இணைந்து நடமாடும் சேவையினை நடத்தி இருந்தனர்.

மேற்படி நடமாடும் சேவையின் போது இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய கிளிநொச்சி, முல்லைத்தீவு,மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 60 குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கான இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர்.

மேலும் ஒரு நடமாடும் சேவையினை நடத்தி தாயகம் திரும்பிய உறவுகளின் பிள்ளைகளுக்கு இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏதுவாகவே சட்ட உதவி ஆணைக்குழுவிடம் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)



சிவன் பவுண்டேசன் நிறுவனத்தினால் மல்லாகம் கோணப்புலம் மற்றும் நீதவான் முகாம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஒருவேளை உணவுக்கு மிகக் கடுமையாக இப்பகுதி முகாம் மக்கள் கஷ்டப்படுவதாக இதில் அரிசி, சீனி, கோதுமைமா, மிளகாய்த்தூள், மீன்ரின், பருப்பு, தேயிலை போன்ற பொருட்கள் அடங்கியிருந்தன. இது 250 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப் பட்டது. சிவன் பவுண்டேசன் அமைப்பின் தலைவர் கணேஷ்வரன் வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக இலவச மின்சார இணைப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஐ.தே.க. முல்லை.மாவட்ட அமைப்பாளர் பிரதமரிடம் கோரிக்கை

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இலவசமாக வழங்கப்பட்டு வந்த மின்சார இணைப்பை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜமால்தீன் ரிசாம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர்களை சந்தித்து கலந்துரையாடிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மாவட்டங்களில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் அமைப்பாளர்களிடம் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது, வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக கடந்த காலங்களில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் அவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் எமது மாவட்டத்தில் மின்சாரம் பெறாத குடும்பங்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

எனவே, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் இலவசமாக மின்சாரம் வழங்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரிடம் நேரடியாக கோரிக்கை விடுத்திருந்தேன்.


இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் இதன்போது உறுதியளித்திருந்தார்.

விரைவில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள குறித்த திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)




## சமூகத்தில் குற்றங்கள் புரிவோரை கடுமையாக தண்டிக்க வேண்டும்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு



முல்லைத்தீவு கைவேலி மருதமடு பகுதியில் கடந்த 20 ஆம் திகதி 6 வயது குழந்தையை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

தாய் வெளிநாட்டிற்கு தொழில் நிமிர்த்தம் சென்றுள்ள நிலையில் மனநோயாளியான தந்தையுடன் வீட்டில் இருந்த 6 வயது சிறுமியை தாய்மாமன் (வயது38) அவரது 18 வயது சகாவும் இணைந்து காட்டுப்பகுதிக்குள் கொண்டு சென்று துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டுள்ளனர்.

எனினும் சிறுமி கூக்குரல் இட்டதையடுத்து அயலவர்களால் சிறுமி காப்பாற்றப்பட்டுள்ளார்.இந் நிலையில் சம்பந்தப்பட்ட நபர்கள் தற்போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் இவ்வாறான துஷ்பிரயோகம் செய்யும் நபர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாக உடன் கடுமையான தண்டனைகள் வழங்க வேண்டும்.

வித்தியாவின் கொலைக்கு பின்னர் நாடெங்கிலும் மாணவர் எழுச்சி ஏற்பட்ட பின்னரும் கூட இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கு கிழக்கு பகுதியில் துஷ்பிரயோக செயற்பாடுகள் மற்றும் பொதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பதற்கு என திரை மறைவில் சில தீய சக்திகள் செய்ற்பட்டு வருகின்றன.

எனவே இவ்வாறானவர்கள் சமூகத்தில் இனம் காணப்படுவதுடன் குற்றங்கள் புரிவோரும் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (2-250)

## பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன



(முன்னார்)

வன்னி குறோஸ் சுகாதார நிறுவனத்தின் தொடரும் வாழ்வாதார நலத்திட்டத்தில் கோழி வளர்ப்பை மேம்படுத்துவதற்காக கடந்த 30 ஆம் திகதி மன்னார் சாந்திபுர கிராமத்தில் ஒரு தொகுதி பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகளையும் அதற்குரிய உபகரணங்களையும் வன்னிகுறோஸ் சுகாதார நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் வழங்கி வைத்தார்.

மேற்படி நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நகர உறுப்பினர் குமரேசன், கால்நடை திணைக்கள பொறுப்பு வைத்தியர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ப்ரீத்தியின் வானவில்

ப்ரீத்தியை வெளியே கூட்டிப்போவது என்றால் அப்பா, அம்மாவுக்கு எவ்வளவு உற்சாகமோ, அதே அளவு பயமாகவும் இருக்கும். இதைப் படித்துக் கொண்டு இருக்கிற உங்களை விட ரொம்பச் சின்ன சுட்டிப் பிள்ளையாக ப்ரீத்தி இருந்தாள். எதை எடுத்தாலும் வாயில் போட்டுக் கொள்வாள். தின்பண்டத்துக்கும் மற்ற பொருட்களுக்கும் அவளுக்கு வித்தியாசமே தெரியாது.

ஒரு தீபாவளி சமயத்தில் அப்பா, அம்மா அவளைக் கடை வீதிக்குக் கூட்டிப் போனபோது புஸ்வாணத்தைப் பார்த்தாள். அது ஏதோ புதுவகை ஐஸ்கிரீம் என தின்னத் தயாராகிவிட்டாள். நிலவரிசை என அழைக்கப்படும் புஸ்வாணமும் கூம்பு வடிவத்தில் ஐஸ்கிரீம் மாதிரியேதான் இருந்தது. அவளைக் கடையிலிருந்து அழைத்துக் கொண்டு வருவதே பெரும் பாடாக இருந்தது. ஆனால், புஸ்வாணம் என்றால் என்ன என்று அவளுக்குத் தெரிய வைக்க, அப்பா அதைக் கையோடு வாங்கிக்கொண்டு வந்துவிட்டார். இரவு நேரத்தில் அப்பாவும் அம்மாவும் புஸ்வாணத்தின் திரியைக் கொளுத்தி, வெளிச்ச மழையாகப் பொழிய வைத்தார்கள். அப்போதுதான் ப்ரீத்தி ஒரு கேள்வி கேட்டு அசத்தினாள்.

ஏப்பா... இது எறும்புகளோட எரிமலைதானே?

புஸ்வாணம் என்றால் என்ன என்று தெரியாத பெண்ணுக்கு எரிமலை எப்படித் தெரிந்தது என ஒரே ஆச்சரியம். எறும்பு அவளுக்குத் தெரிந்த சங்கதிதான். தவழ்கிற பருவத்தில் பெரிய ஆராச்சியாளரைப் போல எறும்பு பிடித்துக் கொண்டு இருப்பாள். எறும்பைப் பிடிப்பது மட்டும் அல்ல; அதைச் சாப்பிடவும் முயற்சிப்பாள். அம்மாவும் அப்பாவும் எவ்வளவோ கண்காணிப்பாக இருந்து, அவள் ஓர் எறும்புத் தின்னியாக மாறாமல் காப்பாற்றினார்கள்.

ஆகவே, அம்மாதான் ரொம்ப ஆச்சரியப்பட்டு, எறும்பு சரி கண்ணு! உனக்கு எரிமலை எல்லாம் எப்படித் தெரியும் என்று கேட்டாள். அதான் டி.வியில பாத்திருக்கேனே அம்மா என்றாள் சாதாரணமாக. அந்தத் தீபாவளியின் அடைமழைக் காலத்தில் ஒருநாள் வானத்தில் வானவில் போட்டு இருந்ததை மாடியில் இருந்து பார்த்தாள் ப்ரீத்தி. அம்மாவை அழைத்து அம்மா! நம்ம வீட்டுக்கு கலர் ரிப்பன் வந்திருக்கு என்று கத்தினாள்.

அம்மா ப்ரீத்தியிடம் அதுக்குப் பேரு வானவில் என்று சொல்லிக் கொடுத்தாள். ப்ரீத்தி வளர்ந்துகொண்டு இருந்தாள். ஓடியாடி ஓராம் வகுப்பு படிக்கும் மாணவியாக வளர்ந்தபோதும்கூட அவளது கேள்விகளும் வெகுளித்தனமும் மாறவில்லை. பள்ளிக்கூடம் விட்டு வரும் வழியில் பட்டாம்பூச்சியைப் பார்த்துவிட்டு அம்மா, பட்டாம்பூச்சிக்கு வீடு எங்கே இருக்கும் சொல்லு? என்று இரவு வரை அம்மாவைத் துளைத்தெடுத்தாள்.

அவளைச் சமாளிக்கிறேன் என்று அப்பா, பட்டாம்பூச்சிக்கு வீடு உன் கட்டிலுக்கு அடியில் இருக்கிறது என்று கூறிவிட்டார். அப்படியா.... சரிப்பா என்று தூங்கிவிட்டாள். காலையில் ப்ரீத்தியைக் காணவில்லை. அப்பாவும் அம்மாவும் வீடு முழுக்க... தெருக்களில் என்று தேடினார்கள். அவளைக் காணோம் என்று கவலையுடன் இருவரும் இருந்தபோது கட்டிலுக்கு அடியிலிருந்து வெளிவந்தாள். பட்டாம் பூச்சியோ அதனது வீடோ அங்கே இல்லாததால் அப்பா பொய் சொல்லிவிட்டதாக குற்றம் சாட்டினாள். அப்பா ஒரு விதமாகச் சமாளித்து பட்டாம்பூச்சிகள் தினம் ஒரு குழந்தையைத் தேடி வெவ்வேறு வீடுகளுக்குச் சென்று குழந்தைகளின் கட்டிலுக்கடியில் தங்கிவிடும் என்றார்.

ப்ரீத்திக்கு அவள் வாங்கிய பொம்மைகள் மற்றும் விளையாட்டுச் சாமான்களிலேயே ரொம்பப் பிடித்தது, கோளம் கோளமாக வாயால் ஊதுகிற சோப்புத் தண்ணீர் டப்பாதான். அது சாதாரணமான கண்ணாடி வடிவ கோளங்களாகத்தான் வெளிவருகிறது என நம்பியவள், அதை உற்றுப் பார்த்தபோது எண்ணெய்ப் படலங்களில் வானவில் நெளிவது போன்ற தோற்றங்களைக் கண்டு குதுகலம் அடைந்தாள். அம்மா நான் வீட்டுக்குள்ளாறயே வானவில்லைக் கொண்டாறப் போறேன் என்றவள், சமையலறை, வரவேற்பறை, படுக்கை அறை என எல்லா இடத்திலும் சென்று ஊதி, கோளங்களை உற்பத்தி செய்து மகிழ்ந்தாள்.

இப்படி எல்லாம் குழந்தையாக இருந்த ப்ரீத்தி, இப்போதும் அதிகம் வளர்ந்துவிடவில்லை. ஆனால், நன்றாகப் படிக்கிறாள். நேற்று மழை பெய்து வானத்தில் நிஜமான வானவில் உண்டானபோது ப்ரீத்தி... வந்து பாருடி என ஆவலாகக் கூப்பிட்டாள் அம்மா.

ப்ரீத்தியோ அம்மா, வானவில் உருவாகக் காரணம் என்ன தெரியுமா? மேகங்களில் இருக்கும் மழைத்துளிகள் சூரியக் கதிரை வாங்கும் போது முப்பட்டகக் கண்ணாடியாகச் செயற்படுது என்று விளக்கம் கொடுக்கிறாள்.

அம்மாவுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.




- 1578 - மார்ட்டின் புரோபிஷர் கனடாவின் பஃபின் தீவைக் கண்டார்.
- 1698 - தொமஸ் சேவரி முதலாவது நீராவிப் பொறிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1823 - பிரேசிலில் போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.
- 1853 - ரஷ்யா துருக்கியின் மீது படையெடுத்தது. கிரிமியப் போர் ஆரம்பமானது.
- 1876 - மொண்டெனேகிரோ துருக்கி மீது போரை அறிவித்தது.
- 1881 - அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்ஃபீல்ட் சுடப்பட்டு படுகாயமடைந்தார். இவர் செப்ரெம்பர் 19இல் மரணமானார்.
- 1940 - சுபாஸ் சந்திரபோஸ் கல்கத்தாவில் கைது செய்யப்பட்டார்.
- 1962 - முதலாவது வோல் மார்ட் அங்காடி ஆர்கன்சா மாநிலத்தில் திறக்கப்பட்டது.
- 1966 - பிரெஞ்சு இராணுவத்தினர் பசுபிக் பெருங்கடலில் அணுவாயுதச் சோதனையை நிகழ்த்தினர்.
- 1976 - 1954 முதல் பிரிந்திருந்த வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம்கள் மீண்டும் இணைந்து கொண்டன.
- 2002 - உலகத்தை பலூனில் தனியே இடைவேளை விடாது பறந்த முதல் மனிதர் என்ற பெருமையை ஸ்டீவ் ஃபொசெட் பெற்றார்.
- 2004 - ஆசியான் அமைப்பில் பாகிஸ்தான் இணைந்தது.

பிறப்புகள்

- 1923 - விஸ்லாவா சிம்போர்ஸ்கா, நோபல் பரிசு பெற்ற போலந்து எழுத்தாளர்.
- 1925 - பத்திரிசு லுமும்பா, கொங்கோவின் பிரதமர் (இ. 1961)
- 1877 - ஹேர்மன் ஹெசே, இலக்கியத்துக்கான நோபல பரிசு பெற்ற கவிஞர் (இ. 1962)

இறப்புகள்

- 1566 - நோஸ்ராடாமஸ், பிரெஞ்சு ஜோதிடர் (பி. 1503)
- 1582 - அக்கெச்சி மிட்சுஹீடெ, ஜப்பானிய சாமுராய் (பி. 1528)
- 1961 - எர்னெஸ்ட் ஹெமிங்வே, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (பி. 1899)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 229

## பொறாமையிலிருந்து விடுதலை!


...இதுதான் அவசரகால சக்தி-உணர்ச்சிகளிலிருந்து எழுவது.

மூன்றாவது அடுக்கு சக்தியானது இருப்புத்தன்மையின் நிலையிலிருக்கும் சக்தி. இது உங்களிடம் இருக்கும் எல்லையற்ற சக்தியின் மூலம்; இதை நீங்கள் உபயோகப்படுத்துவதே இல்லை. இந்த சக்தி அடுக்கை ஆழமான தியானத்தின் மூலம் திறந்து உணர முடியும். நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் இந்த மூன்றடுக்குச் சக்திகளுடனும் நீங்கள் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். விஷூக்தி சக்கரமானது இந்த உயர்சக்தி நிலைகளுக்கான திறவுகோலை வைத்திருக்கிறது.

நான் அலைந்து திரிந்து கொண்டிருந்த நாட்களில் நடந்த ஓர் உண்மையான நிகழ்ச்சியை விவரிக்கின்றேன்...

இமயமலையில் அல்மோரா எனும் அழகு மிளிரும் இடத்தில், தியானம் செய்ய விரும்புபவருக்காக, சில குடிசைகளுடன் ஒரு சிறிய ஆச்சிரமம் இருக்கிறது. அந்த இடத்தைப் பற்றிய ஒரே ஒரு விடயம் என்னவென்றால், இரவில் புலிகளின் நடமாட்டம் இருக்கும்! அங்கு சிறிது காலம் தங்கியிருந்தேன். அங்கு நான் நீண்ட நேரம் தியானத்தில் இருப்பது வழக்கம். அங்கு புலிகள் வருவதை உணர்ந்தால், ஆசிரமத் தலைவர் ஒரு மணியை அடிப்பார்; சாதுக்கள் அவரவரது குடிசைகள் சென்று, திரும்ப வெளியே வரச்சொல்லும் வரை, கதவை மூடியே வைத்திருப்பார்கள்.


ஒரு சமயம், இரவில், நாங்கள் தியானத்தில் இருந்த பொழுது மணியடித்தது; நாங்கள் அனைவரும் குடிசைக்குள் சென்று விட்டோம். அடுத்த நாள் எல்லாரும் பத்திரமாக இருக்கிறார்களா என்று பார்க்க ஆச்சிரமத் தலைவர் சுற்றி வந்தார். ஒரு குடிசை மட்டும் திறக்கப்படாமலேயே இருப்பதைப் பார்த்தார்; உள்ளே இருந்த சந்யாசி, ஜன்னல் வழியாக, கதவைத் திறந்து விடுமாறு கத்திக் கொண்டிருந்தார். நாங்கள் அனைவரும் அந்தக் குடிசைக்கு ஓடி, கதவைத் திறக்க முயன்றோம்; ஆனால் முடியவில்லை. இறுதியாக எங்களில் சிலர், ஜன்னல் வழியாக குடிசைக்குள் நுழைந்தோம். எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கும் விதமாக, ஒரு பெரிய அம்மிக்கல் இயந்திரத்தை, புலி தள்ளி கதவு திறந்து கொள்ளாதவாறு, அதற்கு பின்னால் வைத்திருந்தார். நாங்கள் அனைவருமாகச் சேர்ந்து அந்த அம்மிக்கல்லை நகர்த்தி வைத்துக் கதவைத் திறந்தோம்.



பிறகு தான் "இந்த அம்மிக்கல்லை இவர் தனியாளாக எவ்வாறு கதவருகே நகர்த்தி இருக்கக் கூடும்?" என்பது எங்களுக்கு திடீரென்று உறைத்தது. அதை அவர் எவ்வாறு நகர்த்தினார் என்று அவரிடமே கேட்டோம். அவர் பதிலளித்தார், "நகர்த்தினேனா?" நான் அதை அப்படியே தூக்கியல்லவா வைத்தேன்!. புலிவருவதற்கான சமிக்ஞையைக் கேட்டவுடன், அவர் அந்த அம்மிக்கல்லை அப்படியே தூக்கி கதவுக்குப் பின்னால் வைத்துவிட்டார் அவ்வளவுதான்!.

நான் இதைத்தான் அவசரகால அடுக்கு சக்தி என்கின்றேன். சாதாரணமான சூழ்நிலைகளில் அதே மனிதரால் அந்தக்கல்லை தூக்கியிருக்க முடியாது புரிகிறதா? (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி





# கருவாச்சி காவியம்

வைரமுத்து-176

கைமரங்க மேல அழிஞ்சிக் குச்சியும் நொச்சிக் குச்சியுமா அடுக்கி வைச்சு இறுக்கி முடிஞ்சிட்டான் கத்தாழங்கயித்துல.

அதுமேல பரபரபரன்னு பரப்புனான் பனை ஓலைய. பனை ஓலைக்கு மேல 'கடக்கடக்கு'ன்னு அடுக்குனான் கம்பந் தட்டைகள கூர் செய்த மூங்கில் குடுத்து இழுத்து இறுக்கி மூடி போட்டு எறக்கிட்டான்.

குடிசை கட்டியாச்சு இப்ப கதவு சேக்கணுமே கதவு.

மூணு பூவரசங்கம்பு வச்சு வேப்பங்குச்சிகள ஊடு குச்சிகளா நெருக்கியடிச்சு பட படன்னு உக்காந்து படல் பன்னிப்புட்டான்.

மூணே நாள்ல முடிஞ்சு போச்சு.

அவன் நெஞ்சுல பரவுன சந்தோசம் கூன் வரைக்கும் புகுந்து குறு குறுங்குது.

"என்னிய வளத்த கூலிக்கு என்னால ஆனது ஆத்தா... ஏதோ ஏழைக்கேத்த எள்ளுருண்டை"

பத்தடி பின்னுக்க வந்து குடிசைய அழகு பாத்தான் கொண்ணவாயன்.

பஞ்சவடியில ராமனுக்கும் சீதைக்கும் கட்டிக் குடுத்த குடிசையை லட்சுமணன் நின்னு அழகு பாத்தானோ இல்லையோ கருவாச்சிக்குக் கட்டிக் குடுத்த குடிசையைக் கொண்ணவாயன் கண்ணால கண்டு குளுந்து போனான் குளுந்து.

குடிசைக்குக் குடிவந்த மொதநாளே கண்ணமூடுனதும் ஒறங்கிப்போன கருவாச்சி. மானமில்லாம எலவம் பஞ்சுல படுக்கிறதை விட மானத்தோட ஈரத்தரையில படுத்துக் கெடக்குறது சொகமில்லையா? கோட்டைக்குள்ள படுத்தும் ஒறக்கம் வராதவுக இருக்காக; குடிசைக்குள்ள படுத்தும் கொறட்ட விடுறவுக இருக்காக. ஒறக்கத்த அவள் கட்டிப்புடிக்கிறதுக்கு முன்ன ஒறக்கம் அவள கட்டிப்புடிச்சுப் படுத்துருச்சு.

நாலு வருசமாவே மழை இல்ல. காத்து ஈரஞ்செத்துப்போச்சு. வேப்ப மரத்து நெழலும் வெக்கையடிக்குது.



கரடுகளுக்கு மேயப்போன ஆடுமாடுக எங்கள ஏன் அலைய விடுறீக; போய் வரக் கூலிக்கே புல்லு இல்லையேன்னு பொலம்புதுக.

வாரமாதிரி இருக்கு; மழை வருதில்ல. என்னமோ கள்ளப் புருசனுக்கு உண்டானது மாதிரி மேகத்தைக் கலைச்சு விட்டுட்டுப் போயிருது காத்து. கொளத்துத் தண்ணி கொடத்துத் தண்ணியாப் போச்சு. கெணத்து தண்ணி சொம்புத் தண்ணியாப் போச்சு காடு கரையெல்லாம் காஞ்சு கெடக்குது. அங்க கரிச்சான் கத்தவுமில்ல; காடை முட்டை வைக்கவுமில்ல; வேலைக்கு போனாத்தான் கஞ்சிங்கற ஆளுகளுக்கு வேளா வேளைக்குச் சாப்பாடு இல்ல.

அந்தப் பஞ்சத்திலயும் தெம்போட திரிஞ்சவ திம்சு ஒருத்திதான். கையில சில்லறைச் சத்தம்... காலுல கொலுசுச் சத்தம்... தெனாவெட்டாத் திரியிறா. அவ நெனச்சத நெருக்கி முடிச்சுட்டா. வரவு செலவு அவ கையில; வட்டி வாசி அவ கையில; பத்து நரி மூலையுஞ் சரி; இவ ஒரு மூலையும் சரி. சடையத்தேவர் அஞ்சாறு ஊர்ல குடுத்து வச்ச காசையெல்லாம் கழுத்துல வேட்டி போட்டுக் கணக்கா வசூல் பண்ணிப்புட்டா. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கடல்நீரேரி நீரின் தரம் தொடர்பான ஆய்வுக்கண்ணோட்டம்

யாழ்ப்பாணக் குடாநாடு என்றழைக்கப்படும் நிலப்பரப்பானது புவிச்சரித காலங்களினூடாக ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக மயோசின் கால சுண்ணாம்புப்பாறை கடலிலிருந்து பல்வேறு அகவிசைகளால் மேற்பரப்புக்கு உயர்த்தப்பட்டதனால் உருவான ஒரு நிலப்பரப்பு ஆகும். ஆரம்பத்தில் அகன்ற கடற்பரப்பாகக் காணப்பட்ட இந்தப் பகுதி, குடாநாட்டினதும் தீவுப்பகுதிகளினதும் தரைத்தோற்றம் உருப்பெற்ற பின் கடல் நீரேரியாக உருமாறி, தற்போது முகத்துவார வடிவில் காணப்படுகிறது.

பொதுவாக, கடல் நீரேரி என்பது மந்தமான நீரோட்டத்தைக் கொண்ட, ஆண்டின் குறித்த காலப் பகுதியில் (கோடை காலம்) மண்மேடுகள், பவளப் பாறைகள் போன்றவற்றால் கடலிலிருந்து பிரிக்கப்பட்டுக் காணப்படும் ஆழமற்ற கடலோர நீர்த்தொகுதி ஆகும். முகத் துவாரம் என்பது விரைவானதும், வலிமையானதுமான நீரோட்டத்தைக் கொண்ட, ஒடுங்கிய வாய்ப்பகுதியூடாகக் கடலுடன் தொடர்ச்சியாக ஆண்டு முழுவதும் தொடர்புபட்டுக் காணப்படும் நீர்த்தொகுதி ஆகும். இதன் அடிப்படையில், யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் நீர்த்தொகுதியானது குருநகர்ப்பகுதியூடாக ஆண்டு முழுவதும் பாக்கு நீரிணையுடன் தொடர்புபட்டுள்ளதால், இதனைக் கடல்நீரேரி என்று குறிப்பிடுவதை விட முகத்துவாரம் என்று அழைப்பதே பொருத்தமானதாகும். இருப்பினும், சாதாரணப் பேச்சு வழக்கில் இது யாழ்ப்பாணக் கடல் நீரேரியென்றே இன்று வரை அறியப்பட்டு வந்துள்ளது.

இலங்கையிலுள்ள கடல் நீரேரிகளில் அதிக பரப்பளவைக் கொண்ட (421 $km^2$) கடல் நீரேரியாக யாழ்ப்பாணக் கடல் நீரேரி விளங்குகிறது. இதன் வடக்கு எல்லையாக பொன்னாலைப் பாலத்திற்கு அருகான பகுதியும், கிழக்கு எல்லையாக யாழ். மாவட்ட நகர்ப்பகுதியும், கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியும், தெற்கு எல்லையாக கிளிநொச்சி மாவட்டமும், மேற்கு எல்லையாக பூநகரி நகர் மற்றும் பாக்கு நீரிணையும், மண்டை தீவு, ஊர்காவற்றுறை, காரைதீவு போன்ற சிறு தீவுகளும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியானது யாழ். குடாநாட்டின் பிரதான கடல் வளங்களில் ஒன்றாகும். இது நீர் வாழ் தாவரங்களுக்கும், விலங்குகளுக்குமான வாழிடமாக அமைவதுடன், கரையோரம் வாழ மக்களுக்கான வாழ்வாதாரமாகவும் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தளவில், விவசாயத்தைப் போன்று மீன்பிடித்துறையும் மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய பங்கை வகிக்கிறது. மேலும், ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு இக்கடல்நீரேரியானது இலகுவான போக்குவரத்துப் பாதையாகவும் அமைந்துள்ளது.

**காலநிலை**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சராசரி வெப்பநிலை வருடந்தோறும் 25-31 °C வரை வேறுபடும். மழைவீழ்ச்சியைப் பொறுத்தளவில், யாழ்ப்பாணக் குடாநாடு வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலமான மார்கழி - மாசி மாதம் வரையான காலப்பகுதியில் அதிகளவு மழைவீழ்ச்சியையும், பங்குனி, சித்திரை மாதங்களில் மேற் காவுகை சுற்றோட்ட நிகழ்வுகளால் சிறிதளவு மழைவீழ்ச்சியையும் பெறுகிறது. ஆனால், தென்மேற் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலமான வைகாசி - புரட்டாதி மாதம் வரையான காலப்பகுதி கோடை காலமாகக் காணப்படுவதால், இக் காலப் பகுதியில் இந் நீர்த்தொகுதியின் பெரும்பாலான, பகுதிகள் (முக்கியமாக பொன்னாலை, சாவகசேரிப் பகுதிகள்) நீர்வற்றிய நிலையில் காணப்படும். ஆனால், குருநகரை அண்டிய பகுதிகள் வருடம் முழுவதும் பாக்கு நீரிணையுடன் தொடர்பிலிருப்பதால், இப்பகுதிகளின் நீர்மட்டம் குறிப்பிடத்தக்களவு மாற்றமடைவதில்லை.



யாழ்ப்பாணக் கடல் நரேரி

**நீரின் தரம் குறித்த ஆய்வு**

நிறைந்த கடல்வளங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த யாழ்ப்பாணக் கடல் நீரேரியானது, கடந்த 30 வருடங்களாக வடபகுதியில் நிலவிய ஸ்திரமற்ற நிலைமை காரணமாக புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளதோடு, பல்வேறு வகைகளில் மாசுபடுத்தப்பட்டும் வந்துள்ளது. இக் கடல் நீரேரி சிற்றாழ் மண்டலமாக இருப்பதனால், நீரில் சேரும சிறிதளவு மாசுக்களும் நீர் வாழ் உயிரினங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும்.

அண்மையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாணக் கடல் நீரேரியிலுள்ள நீரின் தரம், மற்றும் பருவகால மாற்றத்தினால் நீரின் தரத்தில் ஏற்படும் வேறுபாடுகள் ஆகியவற்றைக் கண்டறியும் பொருட்டு ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு நடவடிக்கையானது இயற்கை மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியத்தின் கண்டல் காடுகளை உருவாக்குவதற்கான எதிர்கால முயற்சி எனும் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. DANIDA, NORAD, SIDA ஆகிய சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இவ் வேலைத்திட்டத்தின் கீழ், ஆவணி 2014 - வைகாசி 2015 வரையான காலப்பகுதியில், யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் பொன்னாலை - கிளாலி வரையான கடற்பகுதியில் 40 இடங்களிலிருந்து மாதந்தோறும் பெறப்பட்ட நீர் மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இந்த ஆய்வினூடாகப் பெறப்பட்ட கவனத்திற் கொள்ள வேண்டிய சில பெறுபேறுகள் கீழே விபரிக்கப்படுகின்றது.

**உவர்த்தன்மை**

நீரில் கரைந்துள்ள உப்புகளே நீரின் உவர்த்தன்மைக்குக் காரணமாகின்றன. பொதுவாக, மழைக் காலத்தில் மொத்த நீர்த்தொகுதியும் மழைநீரால் ஐதாக்கப்படுவதாலும், திறந்த வடிகால்களினூடாக வெள்ள நீர் வழிந்தோடி நீர்நிலைகளைச் சென்றடைவதாலும் மழைக்காலங்களில் இந்த நீர்நிலைகளிலுள்ள நீரின் உவர்த்தன்மை கோடை காலங்களை விடக் குறைவாகக் காணப்படும். பருவகால மாற்றத்துடனான இத்தகைய வேறுபாடு யாழ்ப்பாணக் கடல் நீரேரியிலும் அவதானிக்கப்படுகின்றது. இருப்பினும், யாழ்ப்பாணக் கடல் நீரேரியின பொன்னாலை - மணியந்தோட்டம் வரையான கடற்பகுதியில் கோடை கால உவர்த்தன்மை (34-43 ppt) அண்ணளவாகக் கடல்நீரின் உவர்த்தன்மையை ஒத்திருக்கும் அதே வேளையில், தென்மராட்சிக் கடற்பகுதியில் கோடைகால உவர்த்தன்மை (63-68 ppt) மிகவும் அதிகரித்துக் காணப்படுகிறது. இது நீர் வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக அமையலாம்.

**சல்பேற்று அயன் செறிவு**

சாதாரணமாக வீடுகள், உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும் துப்புரவாக்கிகள் அற்கைல்பென்சீன் சல்பொனேற்று எனும் ஒரு வகை இரசாயனப் பதார்த்தத்தைக் கொண்டுள்ளன. இத் துப்புரவாக்கிகளைப் பயன்படுத்தி, பாத்திரங்கள், சுவர், தரை, ஆகியவற்றைக் கழுவும் போது, வெளியேறும் கழிவுநீரில் இந்த இரசாயனப் பதார்த்தம் கலந்து விடுகின்றது. இக் கழிவுநீரானது உரிய முறையில் பரிகரிப்புக்குள்ளாக்கப்படாது நீர்நிலைகளுக்குள் வெளியேற்றப்படுமாயின், நாளடைவில் இந் நீர்நிலைகளில் சல்பேற்று அயன் செறிவு அதிகரிக்கும்.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியில், சல்பேற்று அயன் செறிவு பல்வேறு இடங்களில் மிக உயர்வாகக் காணப்படுவதுடன் பருவகால மாற்றத்துடனும் வேறுபடுகின்றது. நீரின் உவர்த்தன்மை போன்று, மழைக் காலங்களில் சல்பேற்று அயன் செறிவு கோடைகாலங்களை விடக் குறைவாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் பொன்னாலை - கிளாலி வரையான கடற்பகுதியில் கோடைகால சல்பேற்று அயன் செறிவு 2,112 - 4,855 ppm வரை வேறுபடுகின்றது. இவ் உயர்சல்பேற்று அயன் செறிவுக்கான பிரதான காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் முறையான கழிவுநீர் சுத்திகரிப்புச் செயன்முறை நடைமுறைப்படுத்தப்படாமையைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக, யாழ்ப்பாணக் கடல் நீரேரியை அண்டிய பகுதிகளிலுள்ள வீடுகள், உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களிலிருந்து நெடுங்காலமாக வெளியேற்றப்பட்டு வரும் அற்கைல்பென்சீன் சல்பொனேற்றைக் கொண்ட கழிவுநீரானது திறந்த வடிகால்களினூடாக யாழ்ப்பாணக் கடல் நீரேரியை வந்தடைந்து, இரசாயன மாற்றங்களுக்குட்பட்டு, நாளடைவில் நீரில் சல்பேற்று அயன் செறிவை அதிகரித்து இருக்கலாம்.

**E.coli பற்றீரியாக்களின் பரம்பல**

மலத்தொற்றுள்ள நீரில் E.coli பற்றீரியாக்கள் பரவியிருக்கும். இவை நீரிலிருந்து நீர் வாழ் உயிரினங்களின் உடலையடைந்து, உணவுச்சங்கிலியூடாக மனிதவுடலைச் சென்றடைந்து, அங்கு நோய்களை ஏற்படுத்துகின்றன. மேலும், மனிதரின் சுகாதாரமற்ற உணவுப் பழக்கங்களும் நோய்கள் பரவக் காரணமாகின்றது. யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் நாவாந்துறை- பாஷையூர் வரையான கடற்பகுதியிலிருந்து பெறப்பட்ட நீர் மாதிரிகளில் E.coli பற்றீரியாக்களின் பரம்பல் அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றுள், பண்ணைப் பாலம், யாழ்ப்பாணக் கோட்டை, பழைய நகர மண்டபம், பாஷையூர் மீன்பிடித் துறைமுகம் ஆகிய இடங்களை அண்டிய கடற்பகுதியிலிருந்து பெறப்பட்ட நீர் மாதிரிகளில் E.coli பற்றீரியாக்களின் பரம்பல் மிக உயர்வாகக் காணப்பட்டது. இப் பிரதேசங்களில், மலக் கழிவுகள் நீருடன் கலந்துள்ளனவென்பதற்கு உறுதியான சான்றாக இது அமைகின்றது.

இச் சந்தர்ப்பத்தில், பண்ணையில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை கழிவுநீர் பரிகரிப்பு நிலையத்தின் வினைத்திறன் குறித்தும், அதிலிருந்து யாழ்ப்பாணக் கடல் நீரேரியினுள் வெளியேற்றப்படும் பரிகரிக்கப்பட்ட நீரின் தரம் குறித்தும் சந்தேகம் ஏற்படு வது இயற்கையே. மேலும், யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் யாழ்ப்பாணக் கடல் நீரேரியை அண்டிய கரையோரப்பகுதிகளில் நெருக்கமாக அமைந்துள்ள மக்கள் குடியிருப்புகளில் மலக் கழிவுகளை முறையாக அகற்றும் செயன முறை நடைமுறைப்படுத்தப்படாமையும், மக்களின் சுகாதாரமற்ற உணவுப் பழக்கங்களும், கரையோரப் பிரதேசங்களில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளும், சீரற்ற திண்மக் கழிவுகளின் முகாமைத்துவப் பொறிமுறையும் கூட மலக் கழிவுகளால் யாழ்ப்பாணக் கடல் நீரேரி மாசடைவதற்கான காரணங்களாகலாம்.

**முன்வைக்கப்படும் பரிந்துரைகள்**

யாழ். குடாநாட்டின்பிரதான கடல வளங்களிலொன்றாகக் கருதபபடும் யாழ்ப்பாணக் கடல் நீரேரியினது நீரின் தரத்தைப் பேணுவதன் மூலமும், நீரை மாசுபடுத்துவதை நாம் தவிர்ப்பதன் மூலமும் நீர் வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதோடு, கடலுணவு உற்பத்தியில்நமது பிரதேசம் தன்னிறைவு காணவும் முடியும். எனவே, ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், பின்வரும் பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முன்வைக்கப்படுகின்றது.

வீடுகள், உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரை, சீரான வடிகால்கள் மூலம் சேகரித்து, முறையாகச் சுத்திகரித்த பின் நீர்நிலைகளுக்குள் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

பண்ணையில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை கழிவுநீர் பரிகரிப்பு நிலையத்தின் வினைத்திறன் மற்றும் அதிலிருந்து யாழ்ப்பாணக் கடல் நீரேரியினுள் வெளியேற்றப்படும் பரிகரிக்கப்பட்ட நீரின் தரம், யாழ்ப்பாணக் கடல் நீரேரியினது நீரின் தரம் ஆகியன குறித்து கண்காணிப்பதற்கு சுயாதீனமான பொறிமுறையொன்றை உருவாக்குதல்.

மக்கள் குடியிருப்புக்கள் நெருக்கமாக அமைந்துள்ள இடங்களில் மலக் கழிவுகளை முறையாக அகற்றும் செயன்முறையை நடைமுறைப்படுத்துதல். திண்மக் கழிவுகளின் முகாமைத்துவத்திற்கென ஒரு சீரான பொறிமுறையை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் கரையோரப் பிரதேசங்களில் கண்டல் காடுகளை உருவாக்கி, நீர் மாசடைதலை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

**மீனா செந்தில்நந்தனன்**
இணைப்பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
**அனுஷா உமாபதி**
தொழில்நுட்ப உத்தியோகத்தர்
யாழ்ப்பாணப பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க.வடக்கு , கிழக்கில் வாக்குகளை இழப்பதற்கு மகிந்த,கோத்தாவின் நடவடிக்கைகளே காரணம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் செயற்பாடுகள் காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வடக்கு கிழக்கில் வாக்குகளை இழந்ததாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எவருக்கும் முடியாத வகையில் நாம் போரை முடிவுக்கு கொண்டு வந்தோம். போருக்கு பின்னர், வடக்கில் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய சகல சிறப்புரிமைகளையும் நாம் வழங்கினோம். எனினும் வடபகுதி மக்களை வென்றெடுக்கமுடியாதுபோனது. வடக்கு மக்கள் எமக்கு எதிராக வைராக்கியத்துடன் வாக்களித்தனர். வடபகுதி மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு என்றும் அப்படி செய்ததில்லை.

ஹெக்டர் கொப்பேகடுவ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது, யாழ்ப்பாண மக்கள் ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கு வாக்களிக்கவில்லை. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கே வாக்களித்தனர்.

சிறிமாவோ பண்டாரநாயக்க போட்டியிடும் போது, குமார் பொன்னம்பலம் போட்டியிட்டார். எனினும் யாழ்ப்பாண மக்களில் 35 வீதமானவர்கள் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கே வாக்களித்தனர்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் முதலாவது தேர்தலில் சிங்கள, தமிழ், முஸ்லிம், கத்தோலிக்கர்கள் என அனைத்து மக்களின் வாக்குகளும் அவருக்கே கிடைத்தன.

2006 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ பிரபாகரனின் புண்ணியத்தில் வென்றார். பிரபாகரன் வடபகுதி மக்கள் வாக்களிப்பதை தடுத்தார்.

எனினும்2010 ஆம்ஆண்டு யுத்தத்தில் நாம் வென்ற போது வடக்கில் சகல வீட்டில் இரண்டு மூன்று பிள்ளைகள் இறந்தனர். எனினும் வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் 30 வீதமான வாக்குகள எமக்கு கிடைத்தன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கில் 13 இலட்சம் வாக்குகள் அளிக்கப்பட்டன. அவற்றில் எமக்கு வெறும் 57 ஆயிரம் வாக்குகள் மாத்திரமே கிடைத்தன.மகிந்த ராஜபக்ஷ அல்லது கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் காரணமாகவே நாம் வடக்கு கிழக்கில் வாக்குகளை இழந்தோம். இந்த யதார்த்தத்தை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்என வும் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.(இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 300 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 50 |
| கோவா | 120 | 100 | 80 |
| கரட் | 180 | 280 | 150 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 180 | 140 | 150 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 160 | 100 |
| பயற்றங்காய் | 100 | 60 | 100 |
| லீக்ஸ் | 150 | 200 | 100 |
| பீற்றூட் | 80 | 160 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 130 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 |
| போஞ்சி | 200 | 240 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 140 | 160 | 120 |
| வெங்காயப்பூ | 250 | 280 | 180 |
| முள்ளங்கி | 50 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 419

நிது நகுலன்

**பிரிவு என்பது யாராலும் மறுக்க முடியாத வலி நினைவு என்பது யாராலும் திருடமுடியாத பொக்கிஷம்!!!**

கிரிஸ் கிரி




சியாமினி தனுசன்




மோகன் தாஸ்




ராஜா தனு




பவித்திரா பரமசிவம்

நண்பண் அருகில் இருந்தால் காதல் தோல்வி கூட




காமெடிப் புரோக்கிராம் தான்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் கணவனை இழந்த பெண்கள்!
# பாலியல் தொழிலுக்குள் தள்ளப்படும் அவலம்!



சிறிலங்காவில் உள்நாட்டு யுத்தம் நிறைவுற்று ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன.

இந்தப் போரின்போது தமது கணவன்மாரை இழந்து தவிக்கும பெண்களின் நிலை இன்னமும் முன்னேற்றம் அடையவில்லை.

குறிப்பாக யுத்தத்தின் போது கணவன்மாரை இழந்து தவிக்கும் பெண்களின் எண்ணிக்கை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இந்தப் பெண்கள் இவர்களது சொந்த மக்களால் கூட மதிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இவர்களில் சிலர் தமது குடும்பத்தைப் பராமரிப்பதற்காக பாலியல் தொழிலில் ஈடுபட வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

சிறிலங்காவின் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்ற போது பாதிக்கப்பட்ட இந்தப் பெண்கள் மத்தியில் தமது வாழ்வின் மீது புதியதொரு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

'எமது சமூகத்தில் என்போன்ற கணவனை இழந்து வாழும் பெண்கள் இகழ்ச்சியாக நோக்கப்படுகின்றனர்' என 50 வயதான பாஸ்கரன் ஜெகதீஸ்வரி கூறுகிறார். இவர் யாழ்ப்பாணத்திலுளள அச்சுவேலி என்னும் கிராமத்தில் வசிக்கிறார். இவர் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட போது இவரது கண்கள் கண்ணீரால் நிரம்பின.

'மக்கள் எம்மைத் தரக்குறைவாகப் பார்க்கின்றனர். நாங்கள் நல்வாய்ப்பற்றவர்கள் என அவர்கள் நினைக்கின்றனர்' என 2009 இல் யுத்தம் முடிவிற்கு வருவதறகு ஒரு மாதத்தின் முன்னர் எறிகணை வீச்சொன்றில் கணவனை இழந்து வாழும் ஜெகதீஸ்வரி கூறுகிறார்.

போரில் கணவன்மாரை இழந்த அல்லது காணாமற் போனவர்களின் மனைவிமார் தற்போது சிறிலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமக்காக ஏதாவது செய்வார் என்ற ஏக்கத்துடன் வாழ்கின்றனர்.

இவ்வாண்டு ஜனவரியில் 'உடைந்த மனங்களையும் உணர்வுகளையும்' ஆற்றுப்படுத்துவதற்கான மீளிணக்கப்பாட்டை முன்னெடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் மூலம் சிறிலங்காவின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன மக்களால் தெரிவுசெய்யப்பட்டார்.

போரின் மிக மோசமான தாக்கத்திற்கு உள்ளாகிய யாழ்ப்பாணத்தில் 27,000 வரையான கணவனை இழந்த பெண்கள் உள்ளதாக உத்தியோகபூர்வ தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

எனது வாழ்வை தற்போது மீளக்கட்டியெழுப்புவதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை' என பண்ணையொன்றில் நாளாந்தம் ரூ. 500 மட்டுமே சம்பாதிக்கும், கணவனை இழந்த எவின் செல்வி கூறுகிறார்.

'ஆனால் எனது மூன்று மகள்களின் வாழ்வைச் சிறப்பாக்குவதற்கு புதிய அரசாங்கம் பயனுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என நான் நம்புகிறேன்' என்கிறார் செல்வி.

பல்வேறு இடங்களில் இடம் பெயர்ந்து வாழ்ந்த செல்வி 2009 இல் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறினார். இவர் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியபோது இவரது வீடும் இவரது கிராமமும் யுத்தத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

1990 இல் செல்வியும் கணவரும் அவர்களது சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்தனர். பின்னர் போரின் இறுதி மாதங்களில் செல்வியின் கணவர் சிறிலங்கா இராணுவத்தின் எறிகணை வீச்சில் படுகொலை செய்யப்பட்டார்.

45 வயதான செல்வியும் இவரது மூன்று பெண்பிள்ளைகளும் யாழ்ப்பாணத்திலுள்ள தமது சொந்தக் காணியில் சிறியதொரு குடிசை அமைத்து வாழ்கின்றனர். செல்வி தனது வீட்டைப் பகுதியளவில் திருத்தியுள்ளார்.

இதற்கான ஒரு தொகுதி நிதி இந்திய அரசாங்கத்தால் யுத்தத்தில் கணவன்மாரை இழந்த பெண தலைமைத்துவக் குடும்பங்களுக்கென வழங்கப்பட்டதாகும். மிகுதி வீட்டைத் திருத்துவதற்கு இவருக்கு இனனமும் ரூ. 200,000 தேவைப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழ்ப் புலிகளுக்குமிடையில் 1972-2009 வரையான காலப்பகுதியில் தொடரப்பட்ட யுத்தத்தின்போது குறைந்தது 100,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இன்னமும் சில ஆயிரக்கணக்கான மக்களுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை. பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த தமிழ்ப் புலிகள் மற்றும் பொதுமக்கள் பலருக்கு என்ன நடந்ததென்று தெரியாது.

கணவனை இழந்து தவிக்கும் பெண்கள் உளவியல் தாக்கத்திற்குட்பட்டுள்ளனர். இவர்களது சொந்த சமூகத்தவர்கள் இவர்களைத் தரக குறைவான வார்த்தைகளால் திட்டுகின்றபோது இந்தப் பெண்களின் மனநிலை பாதிக்கப்படுகின்றது. இந்து சமய முறைப்படி கணவன்மாரை இழந்த பெண்கள் நல்ல காரியங்களுக்கு முன்நிற்பது கெட்ட சகுனம் எனக் கருதப்படுகிறது.

'ஆயுதப் போர் 2009 இல் முடிவுற்றுவிட்டது. ஆனால் புதிய சமூகப் பிரச்சினை ஒன்று தோற்றம் பெற்றுள்ளது. போரின்போது கணவன் மாரை இழந்த இளம் பெண்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்' என யாழ்ப்பாணத்தில் வாழும் கணவன்மாரை இழந்த பெண்களுக்கு ஆதரவாகச் செயற்படும் சமூகப் பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பணியாளர் தனது பெயரை வெளிப்படுத்த மறுத்துவிட்டார்.

இந்தப் பெண்களில் பெரும்பாலானவர்கள் தமக்கான தொழில் வாய்ப்பொன்றைப் பெற்றுக் கொள்வதில் மிகுந்த பிரயத்தனப்படுகின்றனர். இவர்களில் சிலர் பலாத்கார விபச்சாரத்திற்குள் உள்வாங்கப்படுகின்றனர்' என பிறிதொரு சமூகப் பணியாளரான தர்சினி சந்திரன் தெரிவித்தார்.

'கணவன்மாரை இழந்த பெணகளுக்கு எமது சமூகத்தில் நல்லதொரு நிலை வழங்கப்படவில்லை' என 1700 கணவனை இழந்த பெண்களின் குழுவொன்றுக்குத் தலைமை தாங்கும் கிறிஸ்ரின் மனோகரன் தெரிவித்தார்.

'ஆண்கள் எம்மைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்துகின்றனர். எமக்கென எவ்வித பாதுகாப்புமில்லை' என 34 வயதான கணவனை இழந்து வாழும் மனோகரன் தெரிவித்தார்.

'குடும்ப நண்பர்கள்கூட எமது சூழலைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றனர். பணம் மற்றும் வேறு உதவிகளைத் திருப்பிக் கொடுக்க முடியாதவிடத்து எம்மைத் தமது பாலியல் இச்சைக்குப் பயன்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.

இதேபோன்று போக்குவரத்தின் போது தனியாகப் பயணிக்கும் போதுகூட இவ்வாறான சில பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் கணவன்மாரை இழந்த பெண்கள் உள்ளனர்' என பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்தனர்.

கணவன்மாரை இழந்த சில பெண்களை சிலர் மறுமணம் செய்ய முன்வருகின்ற சம்பவங்களும் இடம்பெறுவதாக ஆர்வலரான மரியரோசா சிவராசா தெரிவிக்கிறார்.

ஆனாலும் கணவன்மாரை இழந்து தனிமையில் வாழும் பெண்கள் சிலர் அவர்களது சொந்தக் கிராமங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு நகரங்களில் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற சம்பவங்களும் இடம்பெறுவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினரான அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளை கணவன்மாரை இழந்து தனிமையில் வாடும் பெண்கள் சந்திக்கின்ற போதிலும் சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தில் பல்வேறு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் எனத் தான் நம்புவதாகவும் சிறிசேன அரசாங்கம் நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான சாதகமான சமிக்கைகளை காண்பிப்பதாகவும் அனந்தி தெரிவித்தார்.

இவர் ஒரு சாதாரணமான மனிதர் போல் மக்களுடன் பழகுகிறார். எந்தவொரு பிரச்சினைகளையும் நாங்கள் அதிபர் சிறிசேனவுடன் நேரடியாகக் கலந்துரையாட முடியும் என நான் நம்புகிறேன்' என அனந்தி தெரிவித்தார்.

சிறிலங்காவின் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாகவும் ஆகஸ்ட்டில் புதிய தேர்தல் நடாத்தப்படும் எனவும் வெள்ளியன்று சிறிசேன அறிவித்துள்ளார்.

போரின் போது மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட நிலங்கள் மீளவும் கையளிக்கப்படும் நிகழ்வுகள் வடக்கில் இடம்பெறுகின்றன. ஐ.நா வல்லுனர்களால் முன்வைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையை முன்னெடுக்கவுள்ளதாக சிறிசேன வாக்குறுதி அளித்துள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளக விசாரணையை மேற் கொள்வதற்கான ஒப்புதலை சிறிசேன வழங்கியுள்ளார்.

இவருக்கு முன்னர் நாட்டை ஆண்ட மகிந்த ராஜபக்ச கடும்போக்கு அதிபராகக் காணப்பட்டார். நாட்டில் உள்நாட்டு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என மேற்குலக நாடுகள் கோரிய பொது அதனை ராஜபக்ச எதிர்த்து நின்றார். தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேணத் தவறியவர் என ராஜபக்ச மீது அனைத்துலக சமூகம் குற்றம் சுமத்தியது.

சிறிசேனவின் ஆட்சியின் கீழ் பல்வேறு போக்குவரத்துத் தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கிற்கான போக்குவரத்தின் போது ராஜபக்சவால் முன்வைக்கப்பட்ட கடும்போக்கு நடைமுறைகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கணவனை இழந்த பெணகள் மீது சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பெண்கள் புலனாய்வாளர்களால் துன்புறுத்தப்பட்டனர். ஆனால் தற்போது இவ்வாறான சித்திரவதைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான சில முன்னேற்றங்கள் உள்ள போதிலும் நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு இன்னமும் முக்கிய பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என கணவன்மாரை இழந்து தனித்து வாழும் தமிழ்ப் பெண்களும் தமிழ் சமூகத்தினர் கருதுகின்றனர்.

குறிப்பாக வடக்கில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இராணுவ வீரர்கள் அகற்றப்பட வேண்டும் என இவர்கள் வலியுறுத்துகின்றனர்.

'இவற்றை நாட்டின் புதிய அதிபர் மாற்றியமைக்க வேண்டும் என நாங்கள் நினைக்கிறோம்' என பெண்கள் நலன்பேண் ஆர்வலர் சிவராசா தெரிவித்தார்.

ஆனால் பல பத்தாண்டுகாலத் துன்ப துயரங்களின் பின்னர், இவ்வாறான சில பிரச்சினைகளிலிருந்து மிக வேகமாக மீள்வதெனபது சாத்தியமற்றதாகும்.

**தமிழாக்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முப்படையினரோ, பொலிஸாரோ அரசியல் நடவடிக்கைகளில்லை

முப்படையினரோ அல்லது பொலிஸாரோ அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எந்தவொரு வகையிலும் படையினரோ அல்லது முப்படையினரோ அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதியளிக்கப்படமாட்டாது.

அரசாங்க அதிகாரிகள் கட்சிகளுக்கு ஆதரவளிப்பதனை ஊக்குவிக்கப் போவதில்லை. எதிர்வரும் நாட்களில் இந்த விடயங்களை அவதானிக்க முடியும்.

தேர்தல் சட்டங்களை மீறி நியமனங்கள் வழங்கப்படவில்லை, ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த வகையில் சில அரச நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கம் 100 நாட்களில் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தது.

தமக்கு விருப்பான அரசியல்வாதிகளை தேர்வு செய்யும் உரிமை மக்களுக்கு உண்டு என கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரச நிர்வாக அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## ஜயசேகர தொடர்ந்தும் விளக்கமறியலில் வைப்பு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் அரசியல் ஆதரவாளர் ஒருவரை சுட்டுக்கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர உட்பட சந்தேக நபர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பெல்மதுளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகள் முடிவடைந்துள்ளதால், சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை என குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனையடுத்தே சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

## நீதியமைச்சர் ரவிகருணாநாயக்கவுடன் விவாதத்திற்கு ஆயத்தமாகிறார் பந்துல

(கொழும்பு)

நீதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் விவாதத்திற்கு ஆயத்தம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் இம்மாதம் 7 ஆம் திகதி பகிரங்க விவாதம் ஒன்று இடம்பெறவுள்ளது.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடனான விவாதத்திற்கு தான் ஆயத்தம் என ஊடகத்திடம் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவ்விவாதம் தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# மகிந்த இல்லையென்றால் 100பேர் வெளியேறுவோம்

### டிலான் எச்சரிக்கை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பிரதமர் வேட்பாளராக்காவிடின் கட்சியில் இருந்து முன்னாள் எம்.பிக்கள் பலர் வெளியேறுவதற்கு தீர்மானித்துள்ளதாக சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளர் தொடர்பில் கடும் சிக்கல் நிலைமை ஏற்பட்டிருக்கும் நிலையில் கட்சியின் தீர்மானம் தொடர்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பிரதமர் வேட்பாளராக களமிறக்க நாம் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்றோம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பலமான கட்சியாக ஒன்றிணைத்து மீண்டும் ஜனநாயக ஆட்சியை கட்டியெழுப்ப நாம் போராடி வருகின்றோம்.

ஆனால் கட்சியில் ஒரு சிலர் தமது தனிப்பட்ட பழிவாங்கலை மட்டுமே செய்து வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து வீழ்த்தியதும் இன்றும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிப்பதும் குறிப்பிட்ட ஒரு சிலரேயாகும்.

அவர்களுக்காக கட்சியை சீரழிக்க அனுமதிக்கக்கூடாது. இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தகுதியான ஒருபிரதமர் வேட்பாளராக களமிறக்க வேண்டும். இந்த விடயத்தை தொடர்ச்சியாக நாம் ஜனாதிபதியிடமும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களிடமும் தெரிவித்து வந்துள்ளோம். ஆகவே இப்போது ஜனாதிபதி சரியான முடிவினை எடுக்க வேண்டும் .

மேலும் ஜனாதிபதி நியமித்துள்ள ஆறு பேர் கொண்ட குழுவும் எமது அறிக்கையில் மகிந்தவை பிரதமர் வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்பதையே பரிந்துரைத்துள்ளது. எமது அறிக்கையானது கட்சியின் அனைத்து உறுப்பினர்களினதும் விருப்பத்திற்கமையவே தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே கட்சியின் ஒட்டுமொத்த தீர்மானத்தையும் ஜனாதிபதி கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்தி மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பலமான ஆட்சியை உருவாக்குவதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும்.

நாட்டில் மோசமான சம்பவங்கள் இந்த சில மாதங்களில் நடந்தேறியுள்ளன. வடக்கில் மிகவும் மோசமான சம்பவங்களுக்கு மக்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. நாட்டின் தேசியப் பாதுகாப்பில் மீண்டும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகவே இவை அனைத்தையும் மீண்டும் சரிசெய்ய வேண்டும்.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மகிந்தவை களமிறக்க வேண்டும். இல்லையேல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் எம்.பிக்கள் 100 பேர் கட்சியில் இருந்து விலகி முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் கூட்டணியில் இணைய தீர்மானித்துள்ளோம். கட்சியை ஒன்றிணைப்பது முக்கியமானதே. ஆனால் அதை விடவும் நாட்டை பாதுகாப்பது மிக முக்கியமானதாகும். எனவே மகிந்தவை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டு வந்து நாட்டை கட்டியெழுப்ப நாம் தயாராக உள்ளோம். கட்சியில் இணக்கப்பாடு எட்டப்படாவிடின் மாற்று முடிவுகளை எடுக்க வேண்டி வரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

## எது செல்வம்?

இரவு நேரம் ஒரு மன்னன் குதிரைமீதேறி நகர்வலம் வந்து கொண்டிருந்தான். அடிக்கடி அவன் இப்படி வருவது வழக்கம்.

நாட்டு மக்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கிறது? என்பதை நேரடியாகத் தெரிந்து கொள்வதறகாகத்தான் அம்மன்னன் இப்படி நகரத்தைச் சுற்றி வருவதுண்டு.

இப்படி வரும் போதெல்லாம் தவறாமல் அவனுடைய கண்ணில் படும் காட்சி ஒன்று உண்டு.

அதாவது ஒரு மரத்தடியில் எந்நேரமும் ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருப்பான்.

ஒவ்வொரு தடவையும் அவன் பிச்சைக்காரனை அதே இடத்தில் பார்ப்பதுண்டு.

அப்படிப் பார்க்கும் போதெல்லாம் மன்னனுக்கு ஒரு சந்தேகம்.

இந்தப் பிச்சைக்காரன் ஏன் தூங்குவதேயில்லை.

ஒருநாள் அந்த மன்னன் பிச்சைக்காரன் இருந்த அந்த மரத்துக் கருகில் கொண்டு போய் குதிரையை நிறுத்தி விட்டு கீழே இறங்கினான்.

அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து,

"நான் தினமும் இந்த வழியாக வந்து கொண்டிருக்கிறேன். உன்னையும் பார்த்துக் கொண்ட இருக்கிறேன். உன்னுடைய செயல் வியப்பாக இருக்கிறது."

"என்ன வியப்பு?"

"நீ தூங்கி நான் பார்த்ததேயில்லை. நள்ளிரவில் கூட நீ முழித்துக் கொண்டே இருக்கிறாய். நீ ஏன் தூங்குவதேயில்லை? இதுதான் என்னுடைய சந்தேகம்"

பிச்சைக்காரன் போல தோற்றமளித்த அந்தத் துறவி இதற்குப் பதில் சொன்னார்.

"காவல் காத்துக் கொண்டிருக்கிறேன்."

"காவலா?"

"ஆமாம், ஏதோ ஒன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. அதைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன்."

அரசர் அங்கும் இங்கும் திரும்பிப்பார்த்தார். பக்கத்தில் ஒரு பிச்சைப் பாத்திரம் தான் கண்ணில் பட்டது. வேறெதுவும் தெரியவில்லை.

"என்ன தேடுகிறீர்கள்?" என்றார் துறவி

"உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது என்று தேடுகிறேன்" என்றார் அரசன்.

"அதற்கு ஏன் வெளியில் தேடுகிறீர்கள்? எனக்குக் கிடைத்தது எனக்குள்ளே இருக்கிறது. அதை இழந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் விழித்துக் கொண்டே இருக்கிறேன். தூங்கினால் அது பறிபோய் விடுமோ என்று பயமாக இருக்கிறது.

மயக்கத்தில் நான் அதை மறந்தாலும் மறந்துவிடுவேன். அதற்காகத்தான் இந்த விழிப்புணர்வு."

"எனக்கு ஒன்றுமே தெரியவில்லை" என்றார் மன்னர்.

"உள்ளே போக முடியவில்லை என்றால் உனக்கு எப்படி அது தெரியும்?"

"உன்னிடம் இருப்பது அவ்வளவு பெரிய செல்வமா?"

"ஆமாம்"

"அப்படியானால் என்னிடமும் நிறைய செல்வம் இருக்கிறது."

"உண்மை தான்"

"அப்படி இருக்கும் போது உனக்கும் என்ன வித்தியாசம்"

துறவி சொன்னார்...

"மன்னா ! பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை.

கொஞ்சம் தான் வித்தியாசம். அது என்னவென்றால்...

நீ வெளிப்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறாய்.

நான் வெளிப்பக்கமாக ஏழையாக இருக்கிறேன். நான் உள்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறேன். நீ உள்பக்கமாக ஏழையாக இருக்கிறாய்."

"அப்படியானால்?"

"நான் ஏழையாகவும் இருக்கிறேன், செல்வந்தனாகவும் இருக்கிறேன். அதேபோல் நீயும் ஏழையாகவும் செல்வந்தனாகவும் இருக்கிறாய். அதனால்தான் பெரிய வித்தியாசம் இல்லை என்றேன். நீ புறத்திலே செல்வந்தன். நான் அகத்திலே செல்வந்தன். அவ்வளவு தான்." துறவியின் இந்த விளக்கத்திலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா? விழிப்புணர்வோடு வாழ்ந்தால் நாம் எங்கே இருக்கிறோமோ அதுதான் சொர்க்கம். உறங்கிக் கொண்டே வாழ்ந்தால் நாம் இருக்கின்ற இடமே நரகம்.

இது ஞானிகள் வாக்கு.

நம்ம ஆள் ஒருத்தர்,

"எனக்கு தினமும் ஒருதடவை விழிப்புணர்வு வருகிறது." என்றார்.

பக்கத்திலிருந்தவர் "எப்பொழுது?" என்றார்.

"தினமும் தூங்கி எழுந்திருக்கும் போது"

தூங்கி விழிப்பது என்பது வேறு, ஞானிகள் சொல்லும் விழிப்புணர்வு வேறு.

அதை நாம் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. ஒரு நண்பர் வேடிக்கையாகச் சொன்னார்.

"நான் எப்பொழுதும் விழிப்புணர்வோடு தான் இருப்பேன். ஆனாலும் என்னுடைய சொர்க்கவாழ்க்கை இந்த மாதம் 24 ஆம் திகதிவரைக்கும் தான்" என்றார்.

"ஏன் அப்படி?"


"அன்றைக்குத்தான் எனக்குக் கல்யாணம்."

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## எட்டாமிடத்தைப் பார்க்கிறது! இழப்புகள் அகன்று லாபம் வரும்!




**எட்டாமிடத்தைப் பாக்கிறது!**
**இழப்புகள் அகலும்,**
**லாபம் வரும்!**
**வார்த்தை ஜாலத்தால் பிறரை வசப்படுத்தும் ஆற்றல் பெற்ற கடக இராசி நேயர்களே!**

நட்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் உங்களுக்கு, வரும் குருப் பெயர்ச்சி வளர்ச்சி தரும் வகையில் அமைகின்றது. வசந்த காலத்தை வரவழைத்துக் கொடுக்கப் போகிறது.

இதுவரை ஜென்ம ராசியில் சஞ்சரித்து வந்த குருபகவான் இனி இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். குடும்பத்திலிருந்து குழப்பங்கள் அகல புதிய பாதை புலப்படும். ஆனி 20 இறகு மேல் அற்புதமான வாழ்க்கை அமையும்.

இப்போது பெயர்ச்சியாகும் குருவோடு ராகுவும் ஜனவரி 2016 இல் இணைகின்றார். சனியின் பர்வையும் குரு மீது பதியப் போகின்றது. உங்கள் ராசிக்கு சனி சப்தம அஷ்டமாதிபதியாவார். எனவே அதன் பார்வை பட்ட குரு உங்களை வெற்றிப் பாதையை நோக்கி அழைத்துச்செல்ல பரிகாரங்களை செய்வது நல்லது.

**உதவும் மனப்பான்மை கொண்டவர்கள்!**

எந்தக் காரியத்தை எப்பொழுது செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருப்பீர்கள். உதவும் மனப்பான்மை எப்பொழுதும் உங்கள் உள்ளத்தில் இருக்கும்.

இப்படிப்பட்ட குணாங்களைப் பெற்ற உங்களுக்கு சிம்ம குரு நன்மைகளை வழங்குமா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**இரண்டிலே குருதான் நின்றால்**
**இல்லத்தில் மகிழ்ச்சி கூடும்!**
**திரண்டதோர் செல்வம் சேரும்!**
**தித்திக்கும் தொழில்கள் வாய்க்கும்!**
**வறண்டதோர் வாழ்க்கை மாறி**
**வசதிகள் பெருகும் உண்மை!**
**நிரந்தர யோகம் சேர**
**நேசிப்பீர் குருவைத் தானே!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது உங்களுக்கு பேரும், புகழும் பெருவாரியாக வரப்போகின்றது. ஊறு செய்தவர்கள் விலகுவார்கள். உள்ளத்தில் அமைதி கூடும். காரில் பவனி வரும் யோகமும், கட்டிடம் கட்டும் வாய்ப்பும் கைகூடிவரப் போகின்றது. பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும் வந்து சேரலாம்.

உங்கள் ராசிக்கு 6, 9 இறகு அதிபதியானவர் குருபகவான். எதிர்ப்புகளை வெல்லும் ஆற்றலும், வாங்கல் கொடுக்கல்களை ஒழுங்கு செய்யும் சூழ்நிலையும், ஆரோக்கியமான உடலைப் பெறும் வாய்ப்பும், முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கு கிடைக்கும் சூழ்நிலையும், குருவின் சஞ்சார பலத்தைப் பொறுத்தே அமைகின்றது.

'மகம்' நட்சத்திரத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால் புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தாராபலம் பெற்ற நாளில் தகுந்த பரிகாரங்களைச் செய்து கொள்வது அவசியமாகும். ஆயில்யத்தில் பிறந்தவர்களுக்கு அடுக்கடுக்காக விரயம் ஏற்படலாம். நீண்ட தூரத்திற்கு மாறுதல்கள் ஏற்பட்டு நிம்மதி குறையலாம்.

ஜனவரி 2016 இல் ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கிறது. அப்பொழுது குருவோடு ராகு இணையப் போகிறார். அஷ்டமத்தில் கேது சஞ்சரிக்கப் போகிறார். எனவே, திடீர் இடமாற்றங்கள் உருவாகலாம். எனவே நாக தோஷ நிவர்த்திக்குப் பரிகாரங்களையும், வழிபாடுகளையும் செய்தால் வேகமாக வரும் வளர்ச்சியில் எந்தப் பாதிப்புகளும் ஏற்படாது.

**குரு பார்வை கொடுக்கும் பலன்கள்!**
**ஆறினை குருதான் பார்த்தால்**
**அடைந்திடும் கடன்கள் யாவும்!**
**எட்டினை குருதான் பார்த்தால்**
**இருந்த நோய்மறைந்து போகும்!**
**பத்தினை குருதான் பார்த்தால்**
**பாரினில் தொழில்கள் வாய்க்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. குரு பார்வை ஆறாமிடத்தில் பதிவதால் கடன் சுமை குறையும். மூடிககிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்துவீர்கள். பணியிட மாற்றங்கள் எதிர்பார்த்தபடி அமையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கூடுதலாகவே இருக்கும். அரசு வழிச் சலுகைகள் கிடைத்து ஆச்சரியப்பட வைக்கும். நோய், நொடிகள் தீரும். கொடுத்த கடன்கள் வசூலாகும்.

குருபார்வை அஷ்டம ஸ்தானத்தில் பதிவதால் இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும். கடுஞ்சொல் பேசுவதைக் குறைத்துக் கொண்டால் காரியங்களில் வெற்றி கிடைக்கும். பிறருக்கு கைமாற்றாக கொடுத்த பணம் கைக்கு வந்து சேரும். மண், பூமி சேர்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்.

பத்தாம் இடத்தைக் குரு பார்ப்பதால் முத்தான தொழில் வாய்க்கும். முன்னேற்றம் கூடும். நிதி உதவி கேட்ட இடத்தில் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக்கொண்டு விரும்பிய வண்ணம் தொழில் செய்ய முன்வருவர். தொழிலை விரிவு செய்யவும் அந்நிய தேச தொடர்பு வைத்துக்கொள்ளவும் அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பெற்றோர் வழியில் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிவடைந்து மகிழ்ச்சி கிடைக்கும்.

**கேது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

உடன்பிறப்புகளின் கருத்து வேறுபாடுகள் அகலும். நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும். பணத்தட்டுப்பாடுகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிந்து, கிடைக்கும் சொத்துக்களில் ஒரு பகுதியை விற்றுவிட்டு வரும் பணத்தை தொழிலுக்கு மூலதனமாக்குவீர்கள். பங்காளிப் பகை மாறும். உடன்பிறப்புகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

**சுக்ர சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

நீண்ட நாட்களாக பேசிவிட்டுப் போன வரன்கள் மீண்டும் வந்து சேரும். குழந்தைகளால் உதிரி வருமானங்கள் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் விரிவடையும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் புரிவோர் லாபம் குவிப்பர். தோட்டம் துறவுகளுக்காக தொகையைச் செலவிடுவீர்கள். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் திடீரென வந்து சேரலாம்.





**சூரிய சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கொள்கைப் பிடிப்போடு செயல்பட இயலும். நம்பிக்கைகுரிய வேலை ஆட்கள் கிடைப்பர். நாட்டுப்பற்று மிக்கவர்களால் நன்மை உண்டாகும். வீடு கட்டும் முயற்சியிலும், பத்திரப்பதிவிலும் இருந்த தடை அகலும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். கல்விக்காக எடுத்த முயற்சி கை கூடும். செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து செயறபாடுகளில் வெற்றி கிடைக்க வழிவகுத்துக் கொடுப்பர்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் நிறையப் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். எனவே அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கோபத்தைக் குறைத்துக் கொள்வதன் மூலமும், கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக் கொள்வதன் மூலமும், தீபத்தை ஏற்றி தெய்வத்தை தரிசிப்பதன் மூலமும் துன்பங்களிலிருந்து விடுபட இயலும்.



என்ன இருந்தாலும் குடும்பத்தில் நிம்மதி இல்லையே என்று கலங்குவீர்கள். தாமதம் உங்களை ஆட்கொள்ளும். தக்கவிதத்தில் நீங்கள் செயறபாடுகளில் ஈடுபட்டாலும், சிக்கல்களிலிருந்து தப்பிக்க இயலுமா என்பது சந்தேகம்தான். குருவை கும்பிடுவதன் மூலம் அதன் திருவருளால் துயரங்கள் துள்ளி ஓடும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

செவ்வாய்தோறும் துர்க்கை வழிபாடு உங்கள் துயரங்களை தீர்க்கும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

**கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சி உங்களுக்குப் பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கப் போகிறது. நிம்மதிக்கு வித்திடும் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உங்கள் தேவைகளை குடும்பத்தினர் முடித்துக்கொடுப்பர். சாப்பாட்டு விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

குரு பார்வை பலத்தால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மாறுதல் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகள் ஆரம்பத்தில் குறைவாக இருந்தாலும், ஜனவரிக்கு மேல் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். நாத்தனார் மற்றும் சகோதர வர்க்கத்தினரை சார்ந்தவர் களுக்கு மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வங்கிச் சேமிப்பு உயர்ந்தாலும் உடனுக்குடன் விரயமாகி விடலாம். திங்கள் தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வாருங்கள். மாங்கல்ய ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது கணவரின் உடல் நலத்தில் அடிக்கடி தொந்தரவுகள் உருவாகலாம். எனவே கேது பிரீதியாக சர்ப்ப சாந்தி செய்து கொள்வது நல்லது.

(நாளை சிம்மம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை வன்புணர்வின் பின் எரித்துக்கொன்றது இராணுவம்

## ஐ.நா. அதிர்ச்சித் தகவல்



**சூடானில் இராணுவம் பெண்களை வன்புணர்வின் பின்னர் எரித்துப் படுகொலை செய்ததாக ஐக்கிய நாடுகள் சபை அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஆபிரிக்க நாடான சூடானில், உள்நாட்டு கிளர்ச்சியாளர்களுடன் இராணுவம் சண்டையிட்டு வருகிறது. கடந்த 18 மாதங்களாக இந்த உள்நாட்டுப் போர் நீடித்து வருகிறது.

இந்த நிலையில் அங்கு இராணுவ வீரர்களும், அவர்கள் ஆதரவு போராளிகளும் மேயோம் கவுண்டி பகுதியில் உள்ளூர் மக்களுக்கு எதிரான தாக்குத லில் ஈடுபட்டனர். அப்பாவி உள்ளூர்மக்களை கொன்று குவித்ததுடன், அவர்களுக்கு சொந்தமான பொருட்களையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர். அத்துடன்அங்கு வீடுகளுக்குள் புகுந்து பெண்களை கற்பழித்து பின்னர் உயிரோடு எரித்துக் கொன் றுள்ளனர். அதுமட்டுமின்றி குழந்தைகளுக்கு எதிரான வன்செயல்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

தெற்கு சூடானில் உள்ள ஐ.நா.குழு அளித்துள்ள அறிக்கையில் இந்த திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

## ஜப்பானில் அதிவேக ரயிலில் பயணி தீக்குளித்து தற்கொலை

(டோக்கியோ)

ஜப்பானின் ஷின்கான்ஸன் அதிவேக ரயிலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பயணம் செய்த நபர் தீக்குளித்ததில், அவரும் உடன் பயணித்த மற்றொரு பெண்ணும் உயிரிழந்தனர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலிருந்து ஒஸாகா நகருக்கு சுமார் ஆயிரம் பயணிகளுடன் அதிவேக ரயில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை புறப்பட்டது. ஒடவாரா நகருக்கு அருகே அந்த ரயில் சென்று கொண்டிருந்தபோது அதில்பயணம் செய்த நபர் ஒருவர் உடலில்தீவைத்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, அருகிலிருந்த மற்றொரு பெண் புகையால் மூச்சுத் திணறி உயிரிழுந்ததாகத் தெரிகிறது.

சம்பவம் நிகழ்ந்த ரயில் பெட்டியிலிருந்த மேலும் பலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

அந்தப் பகுதிக்கு உடனடியாக விரைந்த மீட்புக் குழுவினர், புகையால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு முதலுதவி அளித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்று ஜப்பானிய ஊடகங்கள் தெரிவித்தன. 1964 ஆம் ஆண்டு முதல் ஜப்பானில் ஷின்கான்ஸன் அதிவேக ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ரயில்களில் தினமும் இலட்சக்கணக்கானவர்கள் பயணித்தாலும், சிறிதளவும் காலம் தவறாமல் ரயில்கள் இயக்கப்படுவது இதன் சிறப்பம்சமாகும். அரை நூற்றாண்டாக இயக்கப்பட்டு வரும் நிலையில், இதுவரை இந்த ரயில்கள் விபத்தைச் சந்தித்து, அதில் யாரும் உயிரிழந்தது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இராணுவ விமான விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிப்பு

(மேடன்)

இந்தோனேஷிய இராணுவ விமான விபத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 146 ஆக உயர்ந்துள்ளதாக இராணுவ அதிகாரிகள் தகவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து அதிகாரிகள் வெளி யிட்டுள்ள அறிக்கையின்படி, 122 இராணுவ வீரர்கள் மற் றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் Hercules C-130 என்ற இராணுவ விமானம் நேற்று முன்தினம் புறப்பட்டுள்ளது. சுமார் 5 கி.மீ தொலைவு பறந்ததும் அந்த விமானத்தில் கோளாறு ஏற்பட்டதை தொடர்ந்து, புறப்பட்ட இடத்திற்கே விமானம் திரும்பியுள்ளது.

ஆனால், எதிர்பாராத விதமாக விமானிகளின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் சுமாத்ரா நகருக்கு அருகிலுள்ள ஒரு ஹோட்டல் மீது பலமாக மோதி வெடித்து சிதறியது. இதில் விமானத்தின் வால்பகுதி தவிர ஏனைய பகுதிகள் உருகுலைந்து விட்டது. விபத்து நடந்த இடத்தற்கு விரைந்து சென்ற மீட்புக் குழுவினர் இதுவரை 141 உடல்களை மீட்டுள்ளனர், 45 நபர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுளது. மேலும் உயிரிழந்தவர்களில் 9 பேர் பொதுமக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)




## ஹிலாரியின் 3 ஆயிரம் மின்னஞ்சல்களை அமெரிக்கா இணையத்தளத்தில் வெளியீடு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மத்திய நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க, ஹிலாரி கிளிண்டனின் 3000 மின்னஞ்சல்களை பற்றிய விவரங்களை அந்நாட்டு அரசு இணையத்தளம் நேரலையில் வெளியிட உள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலராக ஹிலாரி இருந்த(2009 முதல் 2013 வரை) கால கட்டத்தில் அனுப்பிய மின்னஞ்சல்கள், அவருக்கு வந்த மின்னஞ்சல்கள் என இந்த 3000 மெயில்களை வெளியிட மத்திய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இக்காலகட்டத்தில் வெளியுறவுத்துறைக்கு அதிகாரபூர்வமாக வழங்கப்பட்ட மின்னஞ்சல்களை தவிர்த்துவிட்டு, தனது தனிப்பட்ட மின்னஞ்சல்களை ஹிலாரி பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் தற்போது மின்னஞ்சலகளை வெளிப்படையாக வெளியிட நீதிமன்றம் உத்தரவிட்டுளளது. நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்று அந்நாட்டின் தகவல் சுதந்திர சட்ட இணைய தளத்தில் ஹிலாரியின் 3000 மின்னஞ்சல்கள் வெளிப்படையாக வெளியிடப்பவுள்ளது.

முன்னதாக ஹிலாரி வெளியுறவுத்துறை செயலராக இருந்த 2012 ஆம் ஆண்டு லிபியாவில் உள்ள பெங்காசி நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் அந்நாட்டுக்கான அமெரிக்க தூதர் உட்பட 4 பேர் பலியானார்கள். இந்த தாக்குதல் குறித்து முன்னரே அறிந்து அதை முறியடிக்க ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சிகள், இதற்கு ஹிலாரியின் செயற்பாடுகள் தான் காரணம் என்றும் கூறின. இதையடுத்து தான், ஹிலாரி தனது தனிப்பட்ட மின்னஞ்சல்களை தகவல் பரிமாற்றம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விண்வெளியிலிருந்து ரஷ்ய வீரர் சாதனை

(மொஸ்கோ)

ரஷ்யாவை சேர்ந்த விண்வெளி வீரர் கென்னடி பதால்கா விண்வெளியில் அதிக நாட்கள் இருந்து சாதனை படைத்துள்ளார்.

இப்போது சர்வதேச விண்வெளிமையத்தின்கொமாண்டராக உள்ள அவர், இதுவரை 803 நாட்கள் விண்வெளியில் இருந்துள்ளார. அவருக்கு வயது 57.

முந்தைய சோவியத் யூனியனில் இராணுவ விமானியாக தனது பறக்கும் பணியை தொடங்கிய அவர், 1998 ஆம் ஆண்டு முதல்முறையாக விண்வெளிக்கு சென்றார்.

இப்போது விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள அவர் வரும் செப்டெம்பரில் பூமி திரும்ப இருக்கிறார். அப்போது விண்வெளியில் 2.5 ஆண்டுகள் இருந்த சாதனையை அவர் படைப்பார். (இ-7)

### ஏமன் சிறை தகர்ப்பு

## 1,200 கைதிகள் தப்பியோட்டம்

ஏமனில் அல்கொய்தா இயக்கத்தினரால் சிறை தகர்க்கப்பட்டது. இதில் இந்த இயக்கத்தைச் சேர்ந்த பயங்கரவாதிகள் உட்பட சுமார் 1200 கைதிகள் தப்பி ஓடியதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஏமனின் நகரான தாய்ஸில் உள்ள சிறையில் நேற்று முன்தினம் கைதிகள் மத்தியில் திடீரென மோதல் ஏற்பட்டது. இதனை அடுத்து அல்கொய்தா பயங்கரவாதிகள் அதிரடியாக புகுந்து சிறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தினர்.

சிறை தகர்ப்பில் அல்கொய்தா உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத இயக்கங்களைச் சேர்ந்த பல முக்கிய நபர்கள், சந்தேக குற்றவாளிகள் என சுமார் 1200 கைதிகள் தப்பி ஓடினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏமனில் அவ்வப்போது சிறை தகர்ப்பு நடந்தாலும், ஆயிரத்துக்கும் மேலான கைதிகள் தப்பியோடியது இதுவே முதல முறை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தச் சதியின் பின்னணி தொடர்பாக எந்த தகவலும் வெளியாகவில்லை.

முன்னதாக ஏமனின் தென்கிழக்கே உள்ள முக்கிய சிறையை அல்கொய்தா இயக்கத்தினர் திட்டமிட்டு தகர்த்து அங்கிருந்த அதன் முக்கிய பயங்கரவாத தலைவர் உட்பட சுமார் 300 கைதிகளை தப்பிக்கச் செய்தனர். (இ-7)

## எகிப்தில் இராணுவ சோதனை சாவடியை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல்

### 60 பேர் பலி

எகிப்து நாட்டின் வடகிழக்கு பகுதியான வடக்கு சினாயில்உள்ள5ராணுவசோதனை சாவடிகளை குறிவைத்து ஒரே நேரத்தில் தீவிரவாதிகள் தற்கொலைப்படை மற்றும் பயங்கர ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 60 இற்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் 10இற்கும் மேற்பட்ட வீரர்கள் படு காயம் அடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும் இந்த எண்ணிக்கை உறுதி செய்யப்படவில்லை. இந்த சம்பவத்தில் தீவிரவாதிகள் தரப்பில் 22 பேர் பலியானதாகவும் இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

எகிப்து ஜனாதிபதி அப்தெல்- பத்தா அல் சிஸி தீவிரவாதிகளை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடந்த சில தினங்களுக்கு முன்கூறியதையடுத்து தீவிரவாதிகள் இந்த தாக்குலை அரங்கேற்றியுள்ளனர். கடந்த இரு தினங்களுக்கு முன் எகிப்து அரசின் ஜெனரல் சட்டத்தரணி ஹிஷாம் பாரகாத் கார் வெடிகுண்டு தாக்குதல்மூலம் கொல்லப்பட்டது குறிப்பிடதக்கது.

கடந்த 2013இல் எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி முகமது மோர்சி பதவியில் இருந்து வெளியேறியதற்கு பிறகில் இருந்து அங்கு பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுவது அதிகரித்துள்ளது. இதுவரை 600இற்கும் மேறபட்ட பாதுகாப்பு படைவீரர்கள் 2013இற்கு பின்னர் தீவிரவாதிகள் தாக்குதலுக்கு பலியாகியுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க டொலர்களை கடத்திச் செல்ல முயற்சித்தவர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயத்தாள்களை நாட்டில் இருந்து எடுத்துச் செல்ல முயற்சித்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 85 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டதாக சுங்க திணைக்களத்தின் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

இந்த நபர், வெளிநாட்டு நாணயங்களுடன் சிங்கப்பூர் நோக்கி புறப்பட்டுச் செல்லவிருந்த நிலையில் நேற்று அதிகாலை 1.20 அளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

59 வயதான இந்த சந்தேக நபர் கொழும்பு ராஜகிரிய பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

அண்மைக்காலமாக வெளிநாடுகளுக்கு தங்கம், யானைத்தந்தம், வல்லப்பட்டை, ஹெரோயின், கஞ்சா, அபின் போன்றவை கடத்தப்பட்டு வருவதாகவும் காமினி தெரிவித்தார்.

அதேவேளை சட்டவிரோத கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட பின்னர் நூறு நாளில் தேர்தல் முறைமை மாற்றப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு முதல் நூறு நாளில் தேர்தல் முறைமை மாற்றப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

20 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக தேர்தல் முறைமையை மாற்றியமைக்க முயற்சித்தேன். எனினும் சில இனவாத கட்சிகள் தேர்தல் முறைமை மாற்றத்தை தடுத்து நிறுத்தி விட்டன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நான் அப்போதைய அரசாங்கத்திலிருந்து விலகி வெளியேறினேன்.

37 ஆண்டுகளாக போராடிய நோக்கமொன்றை வெற்றி கொள்ளும் நோக்கில் அவ்வாறு வெளியேறினேன்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மற்றும் இந்த தேர்தல் முறைமைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே முதலில் எதிர்ப்பை வெளியிட்டது. சிறிமாவோ பண்டாரநாயக்க இந்த தேர்தல் முறைமைக்கு எதிராக நாடாளுமன்றில் குரல் கொடுத்திருந்தார்.

1999 ஆம் ஆண்டில்தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை பொருத்தமற்றது என ஐக்கிய தேசியக் கட்சி புரிந்து கொண்டது.


எனினும் சுதந்திரக் கட்சி 78 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்து செய்ய போராடி வருகின்றது.

20 ஆண்டு ஆட்சி செய்த சுதந்திரக் கட்சிக்கு புதிய பரிணாமம் ஒன்றை வழங்காவிட்டால் மீளவும் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பது சிரமமாகிவிடும். ஊழல் மோசடிகாரர்களை பாது காக்காது அவர்களுக்கு வேட்பு மனு வழங்காது கட்சியை பாதுகாக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர மாணவர் முன்னணி என்ற அமைப்பினை மீளமைப்பு செய்யும் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இராணுவம் நிர்மாணித்த ஹோட்டல்கள் புலி ஆதரவாளர்களுக்கு விற்பனையாம்

## ஞானசாரதேரர் கூறுகிறார்



வட, கிழக்கில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டல்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யும் சதித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல்கள் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

நாட்டுக்குள் ஊடுருவியுள்ள மொசாட், சீ.ஐ.ஏ மற்றும் றோ ஆகிய உளவுப் பிரிவினர் மிக நுட்பமான முறையில் ஆட்சியாளர்களை வழி நடத்துகின்றனர்.

இதனால் நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கு பாரியளவில் குந்தகம் ஏற்படக் கூடிய அபாயம் உருவாகியுள்ளது.

போர் வீரரான ஹசல காமினி ஓர் விசரன் எனக் கூறும் அளவிற்கு நாடு சீர்குலைந்துள்ளது.

இவை வெறுமனே எதேச்சையாக நடைபெறுபவை அல்ல. மிகவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சர்வதேச சூழ்ச்சித் திட்டமாகும்.

தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரும், பிரபல அரசியல்வாதி ஒருவரும் மத மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

தற்போது நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டவர்கள் சஞ்சரிக்கின்றனர். இவர்கள் யார் எதற்காக வந்திருக்கின்றார்கள் என எவரும் ஆராய்ந்து பார்ப்பதில்லை.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய் என எவரேனும் கூற முன்வந்தால் சாட்சியங்களுடன் அவற்றை நிரூபிக்கத் தயார் என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாட்டின் நலனுக்காக கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிடும்! அர்ஜுன எச்சரிக்கை

நாட்டின் நலனுக்காக கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிடும் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவித்தால், அது மக்களுக்கு செய்யும் துரோகச் செயலாகவே கருதப்பட வேண்டும்.

ஜனாதிபதி அவ்வாறு செய்தால் அது நாட்டையும் நாட்டு மக்களையும் காட்டிக் கொடுப்பதாகவே கருதப்பட வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வாறான ஓர் தீர்மானத்தை எடுக்கக் கூடியவர் அல்லர்.

எனினும் அவ்வாறு ஓர் தீர்மானத்தை எடுத்தால் கட்சி, நிற பேதங்களைக் களைந்து நாட்டுக்காக கடுமையான தீர்மானத்தை எடுக்க பின்நிற்கப் போவதில்லை என அமைச்சர் சிங்கள இணைய ஊடகமொனறுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக நியமிக்கப்படக் கூடாது என்பதில் மிகவும் உறுதியான நிலைப்பாட்டை பின்பற்றி வரும் அர்ஜுன ரணதுங்க, அண்மைக் காலமாக மகிந்த எதிர்ப்பு கருத்துக்களை ஊடகங்களுக்கு வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், அவரது உடன் பிறப்பான மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மகிந்தவை பிரதமராக்கும் முனைப்பின் முக்கிய சூத்திரதாரியாக செயற்பட்டு வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



தேசிய கலை இலக்கியப் பேரவையின் 42 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணம் கொக்குவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வுகளின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் மீதான பிடி இறுகிக் கொண்டே செல்கிறது



செல்வம், பாலு மற்றும் லீ ஸ்காட்

(ஜெனீவா)

**இலங்கை அரசின் மீதான பிடி நாளுக்குநாள் இறுகிக் கொண்டே செல்கிறது என்பதை ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் 29ஆவது கூட்டத் தொடர் நிகழ்வுகள் உணர்த்துகின்றன என பா.ம.க-வின் செய்தித் தொடர்பாளரும் பசுமைத் தாயகம் அமைப்பின் நிர்வாகியுமான சட்டத்தரணி பாலு தெரிவித்துள்ளார்.**

மனித உரிமை மீறல்கள் என்ற தலைப்பில் இணைக் கூட்டம் ஒன்றையும் பிரித்தானிய தமிழர் பேரவை பங்களிப்போடு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் விகடனுக்கு அளித்த செவ்வியில் கே.பாலு தெரிவிக்கையில்,

**ஜெனீவாவில் இப்போது நடைபெற்றுள்ள இந்தக் கூட்டம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது?**

2009-ல் இலங்கையில் போர் முடிந்த நிலையில் எல்லாமே முடிந்துவிட்டது என்றுதான் நினைத்தோம். தமிழ்நாட்டில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன.

ஆனால், இலங்கையில் மட்டும் காட்சிகள் துளிகூட மாறாமல் அப் படியே இருந்தன.

ஈழத் தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள், ஏமாற்றப்பட்டார்கள், விரட்டப்பட்டார்கள். அப்படிப்பட்ட சூழலில்தான் பசுமைத் தாயகம் அமைபபானது புலம்பெயர்ந்து வாழக் கூடிய ஈழத் தமிழர்களின் உதவியோடு பாதிக்கப்பட்ட மக்களை ஐ.நா முன் நிறுத்தி, ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு நீதி விசாரணை வேண்டும் என்பதை உரக்கச் சொல்லியது.

இன்று இலங்கைக்குக் கடிவாளம் போடக்கூடிய ஒரே அமைப்பு ஐ.நா மட்டும்தான். வருகிற செப்டம்பர் மாதம் ஐ.நா-வின் மனித உரிமை ஆணையத்தின் 30-வது கூட்டத் தொடர் நடைபெற உள்ளது.

அதில், இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பு குறித்த அறிக்கையை ஐ.நா-வின் உண்மை கண்டறியும் குழு தாக்கல் செய்யவிருக்கிறது. அந்த அறிக்கைதான் ராஜபக்ஷவின் ஒட்டுமொத்த தலையெழுத்தையும் மாற்றி அமைக்கப் போகிறது.

**இறுதி விசாரணை அறிக்கை வெளிவருவதில் ஏதாவது சிக்கல் இருக்கிறதா?**

நிச்சயமாக. இலங்கை அரசு ஒரு மிகப் பெரிய இனப்படுகொலையை நிகழ்த்தியிருக்கிறது. ஈழத் தமிழர்களைக் கொத்து கொத்தாகக் கொன்று குவித்தது மட்டுமல்லாமல் வெள்ளை கொடியேந்தி சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களின் நிலை மர்மமாகவே இருக்கிறது. இவை அனைத்துக்கும் எங்களிடம் ஏகப்பட்ட ஆதாரங்கள் உள்ளன.

அதனை ஐ.நா-வில் சமர்ப்பித்து விட்டோம். இலங்கை அரசை போர்க் குற்றவாளியாக அறிவிக்கும் அந்த அறிக்கை வெளிவருவதை இலங்கை விரும்பவில்லை. அதனால், பல சூழ்ச்சிகளைக் கையாண்டு, அறிக்கை வெளிவர விடாமல் தடை ஏற்படுத்தி வருகின்றனர்.

**இணைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐ.நா-வின் முக்கிய சாட்சிகள் யார்?**

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர். நடேசனின் மகன், புலித்தேவன்ன்மனைவிகுறிஞ்சி, மலரவனின் மனைவி சுசிலாம்பிகை, உதயகுமாரின் மனைவி ஆகியோர் இதில் கலந்துகொண்டு இத்தனை ஆண்டு காலம் தாங்கள் அனுபவித்து வரும் வேதனைகளைக் கண் ணீரோடு பதிவுசெய்தனர்.

அவர்களுடைய விசும்பல்களைத் தமிழர்கள் நீதிக்கான நல்லெண்ண தூதுவர் லீ ஸ்காட் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்ட நிபுணருமான ஜானினி கிரிஸ்டி பிரிமிலோ ஆகியோர் குறித்துக்கொண்டனர். இவர்களின் சாட்சியம் கல்நெஞ்சர்களையும் கரைக்கும்.

இந்த நான்கு சாட்சிகளுடன் இன்னும் ஏராளமான சாட்சிகள் ஐ.நா முன் வர தயாராக இருக்கிறார்கள். அவர்களைச் சரியான நேரத்தில் நாங்கள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் நிறுத்துவோம்.

**பசுமைத் தாயகம் என்பது சுற்றுச்சூழல் அமைப்பு. ஈழத் தமிழர் விவகாரத்தை இது கையில் எடுத்திருப்பது சந்தர்ப்பவாதம் என்று சிலர் சொல்கிறார்களே?**

ஈழத் தமிழர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தர வேண்டும் என்பதற்காகத்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். சிலர், ஐ.நா-வின் நடவடிக்கைகளில் நம்பிக்கையின்றி எங்களுடைய முயற்சிகளை கொச்சைப் படுத்தி இருக்கிறார்கள். நினைவுதினத்தை அனுசரித்துவிடுவதன் மூலம் மட்டுமே இலங்கையில் அமைதி திரும்பிவிடாது. ஐ.நா மன்றத்தின் விசாரணைகளை நம்புங்கள்.

**இறுதி விசாரணை அறிக்கைத் தாக்கலுக்குப் பிறகு என்னென்ன மாற்றங்களை இலங்கையில் எதிர ார்க்கலாம்?**

இலங்கையில் நடைபெற்றது ஓர் இனப்படுகொலை. அதுகுறித்து விசாரணை அறிக்கை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக, வந்தால் இலங்கையில் சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றாக வாழ முடியாது. தமிழர்கள் வாழ் வதற்கு தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்படும்.

மேலும், மகிந்த ராஜபக்ஷ போர்க குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு அவர் என்னென்ன போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்பதை சர்வதேச நீதிமன்றம் விசாரிக்கும்.

இதைத்தான் பசுமைத் தாயகமும் பா.ம.க-வும் எதிர்பார்க்கிறது. செப்டெம்பர் மாதம் நடைபெற இருககும் 30-வது ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் கூட்டத்தில் அன்புமணி ராமதாஸ் கலந்துகொள்ள இருக்கிறார். இந்த நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வோம் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## மெட்ரோ ரயில் விளம்பரத்தில் பிரதமர் படம் போடாதது ஏன்?

### தமிழிசை சவுந்தரராஜன் கேள்வி

தமிழக பா.ஜனதா தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று டில்லி செல்வதற்காக சென்னை விமான நிலையம் வந்தார். அப்போது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மெட்ரோ ரயில் தொடக்க விழா குறித்து நான் கூறிய கருத்துக்கு பதில் அளிப்பதாக கூறி அமைச்சர் தங்கமணி மோசமான வார்த்தைகளால் விமர்சனம் செய்துள்ளார். இது கண்டிக்கத்தக்கது.

திறப்பு விழா நிகழ்ச்சியில் சில குறைபாடுகளை சுட்டிக்காட்டினேன் அதற்காக அவர் வரம்பு மீறி கருத்துக்களை வெளியிடுவது ஏற்க கூடியது அல்ல.

மத்திய அரசு உதவியுடன் மெட்ரோ ரயில் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு பா.ஜனதா மிகவும் உதவியாக இருந்து வருகிறது.

மத்திய அரசு உதவியால், அதன் ஒப்புதலுடன் நடைபெறும் மெட்ரோ ரயில் சேவை தொடக்க விழா விளம்பரத்தில் இந்திய பிரதமர் மோடியின் படம் இடம் பெறவில்லை. அது ஏன்? இதை கேட்டதில் என்ன தவறு இருக்கிறது?

தமிழக பா.ஜனதாவில் 40 இலட்சம் பேர் உறுப்பினர்களாக சேர்ந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவில் பயிற்சி வகுப்பு நடைபெற இருக்கிறது. இது குறித்து நானும், தமிழக பா.ஜனதா நிர்வாகிகளும் பா.ஜனதா தலைவர் அமித் ஷாவை சந்தித்து பேச இருக்கிறோம்.

இதற்காக டில்லி செல்கிறேன். அவரது ஆலோசனைக்குப் பிறகு பா.ஜனதா தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறும்.

கல்லூரிகளில் அனைத்து மாணவிகளும் ஒரே மாதிரி உடை அணிய வேண்டும் என்றுதான் எச்.ராஜா சொன்னார். எந்த மதத்தையும் குறிப்பிட்டு பேசவில்லை. அவரது பேச்சு தவறாக திரித்து கூறப்படுகிறது. இவ்வாறு தமிழிசை சவுந்தரராஜன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கை பெண்ணால் தரையிறக்கப்பட்ட விமானம்

டுபாய் சர்வதேச விமானம், மும்பை சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் அவசரமாக விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது.

35 வயதான உவைசா மொஹிதீன் பிச்சை அப்துல் ரசீதா என்ற இலங்கைப்பெண்கொழும்பில்இருந்து டுபாய் வழியாக மடினாவுக்குப்ளை டுபாய் FZ551 என்ற விமானத்தில் பயணம் செய்துள்ளார்.

குறித்த பெண் திடீரென மயக்கமடைந்தமையினால் விமானத்தை தரையிறக்குமாறு நிர்ப்பந்திக்கப்படவும் மும்பையில் நேற்று முன்தினம் 10.50 மணியளவில் விமானம் தரை யிறக்கப்பட்டுள்ளது.

MIAL மருத்துவ குழு சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து குறித்த பயணிக்கு அவரச மருத்து உதவி வழங்கியுள்ளனர்.

பணியில் இருந்த வைத்தியர்கள், நோயாளி வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமையினால் அவருக்கு அவசர மருத்துவ தேவை ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

குறித்த பெண் மும்பை செவன் ஹில்ஸ் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## பேஸ்புக் பயன்படுத்துவோர் எண்ணிக்கை இந்தியாவில் 12.5 கோடியை தாண்டியது

(புதுடில்லி)

இந்தியாவில் பேஸ்புக் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 12.5 கோடியை தாண்டியது.

கடந்த 6 மாதத்தில் மட்டும் இந்தியாவில் ஒரு கோடியே 30 இலட்சம் பேர் புதிதாக பேஸ்புக்கில் இணைந்துள்ளனர்.

இதன் மூலம் சர்வதேச அளவில் பேஸ்புக் பயன்படுத்துவோர் அதிகம் உள்ள நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியா 2ஆவது இடத்தை பிடித்துள்ளது.

கையடக்க தொலைபேசி 2ஜி இணையத்தள சேவையிலும் பேஸ்புக்கை எளிதாக பயன்படுத்தும் பேஸ்புக் லைட் ஆப் அறிமுகப்படுத்தப்பட்டது, இந்த எண்ணிக்கை அதிகரிக்க முக்கிய காரணம் இந்தியாவில் தொலைபேசி மூலம் பேஸ்புக்கை பயன்படுத்து வோர் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் 3ஜி சேவை பல இடங்களில் கிடைத்தாலும், 80 சதவீத தொலைபேசி வாடிக்கையாளர்கள் 2ஜி சேவையையே பயன்படுத்தி வருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவின் வெற்றி உறுதி

## ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி உட்பட ஏனைய கட்சிகள் எப்படியான செயற்பாடு களை முன்னெடுததாலும் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் வெற்றி பெறும் என அந்த கட்சியின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் உள்ள 225 மொத்த ஆசனங்களில் ஐக்கிய தேசியக் கட்சி 120 முதல் 125 வரையான ஆச னங்களை கைப்பற்றும் என் றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள கட் சிகளின் தலைவர்கள் தாம் எந்த கட்சியில் போட்டியிடு வது என்பதை கூட தீர்மா னிக்க முடியாதுள்ளனர்.

வேட்புமனு தாக்கல் செய்ய இன்னும் இரண்டு, மூன்று நாட்களே உள்ளன. இத னால் அவர்கள் பெரும் பிரச்சி னைகளுக்கு உள்ளாகியுள்ளனர என்பதை காணமுடிகிறது.

எந்த பிரச்சினையாக இருந் தாலும் பரவாயில்லை இம் முறை ஐக்கிய தேசியக் கட் சியே வெல்லும் எனவும் அகில விராஜ் காரியவசம் தெரிவித் தார். (இ-7)



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் பரிசில் தின விழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் படத்தில் காணலாம்.

# மகிந்தவின் இறுதி முடிவை அறிய தேசிய சுதந்திர முன்னணி முயற்சி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பற்றியதான இறுதி முடிவை தெரிந்து கொள்ள விமல் வீரவன்ச தலைமை யிலான தேசிய சுதந்திர முன் னணியானது மகிந்தவின் சொந்த கிராமத்திற்கு செல்ல வுள்ளதாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்த லில் போட்டியிடுவது தொடர் பான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முடிவை அறிந்து கொள்ளவும் பிரதமர் வேட்பாளராக போட்டியிடு மாறு அவருக்கு அழைப்பு விடுக்கவும் 200 தொழிற்சங் கங்களுடன் மெதமுலன வுக்கு செல்ல உள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி யின் அரசியல் சபை உறுப் பினரும் அதன் தொழிற்சங்க பிரதிநிதியுமான பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள் ளார்.

கொழும்பு நாராஹேன் பிட்டி அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெ ற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் பேசிய அவர், உழைக் கும் மக்களை மகிந்த ராஜ பக்ஷவையோ கோருவதாக கூறியுள்ளார்.

தேர்தல் ஒன்று அறிவிக் கப்பட்டதும் அரச துறையில் நியமனங்களை வழங்க முடியாது. எனினும் அண் மைய காலமாக அப்படியான பல நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன.

இலங்கை ரயில் திணை க்களத்தில் 3 ஆயிரம் ஊழி யர்கள் நீக்கப்பட்டு 450 பேர் புதிதாக இணைத்து கொள்ளப பட்டுள்ளனர். கடல்சார் பல்க லைக்கழகத்தில் 50 பேர் புதிதாக இணைத்து கொள் ளப்பட்டுள்ளதுடன் துறைமு கத்திற்கு 45 பேர் இணைத்து கொள்ளப்பட்டுள்ளதாக தக வல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர் தலில் இப்படியான நியமன ங்களை வழங்கிய போது தேர்தல் ஆணையாளர் மற் றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அது குறித்து தகவல்களை வெளியிட்டு, அதற்கு எதிர்ப்புகளை கிள ப்பி வந்தன.

எனினும் இம்முறை இந்த தரப்பினர் அமைதியான கொள்கையை கடைப்பிடித்து வருகின்றனர் எனவும் பிய சிறி விஜேநாயக்க தெரிவித் தார். (இ-7)

# மைத்திரியின் அணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் சோமவன்ச

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன் னணியின் முன்னாள் தலை வர் சோமவன்ச அமரசிங்க வின் மக்கள் ஊழிய கட்சி (ஜனதா சேவக பக்சய), எதிர் வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரி சார்பு அணியில் இணைந்து போட்டி யிடவுள்ளது.

சோமவன்ச தலைமை யிலான கட்சியின் பிரதிநிதி கள் நேற்று முன்தினம் மைத் திரி தரப்பின் முக்கியஸ் தர்கள் சிலருடன் இந்த விட யம் சம்பந்தமாக பேச்சுவார் த்தை நடத்தியதாக கூறப்ப டுகிறது.

ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபக உறுப்பினர்க ளில் ஒருவரான சோமவன்ச அமரசிங்க, அந்த கட்சியின் தற்போதைய தலை மையுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக அண்மையில் அந்த கட்சி யில் இருந்து விலகி னார் என்பது குறிப்பிடத்தக் கது. (இ-7)

# செல்ஃபி



வித்தியாதரன்





தீபன், பருத்தித்துறை.



ஜெயந்தன், கரவெட்டி.



ரபாபாபா



லக்ஷன்



பெதுர்சன்

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை photosofvalampurii@gmail.com என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள். சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எறும்புகளைப் போல உபதேசிப்பவர் யாருமில்லை. ஆனால் அந்த எறும்புகளோ பேசுவதில்லை.
– பிராங்கிலின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சந்திரிகாவை வேட்பாளராக்க தமிழ்த் தரப்பு முயற்சிக்க வேண்டும்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அவர் போட்டியிடப் போகும் கட்சி எதுவெனத் தெரியாவிடினும் அவர் தேர்தலில் போட்டியிட்டால் பாராளுமன்ற உறுப்பினராவது நிச்சயம்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது கௌரவக் குறைவு என்பதை மகிந்த ராஜபக்ஷ தான் உணரவேண்டும்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி என்ற பெயரோடு வீட்டில் இருப்பதை விட, பாராளுமன்ற உறுப்பினர் என்றிருப்பதன் மூலம் தனக்கு வரக்கூடிய விசாரணைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்று மகிந்த நினைப்பதைவிட, பாராளுமன்ற உறுப்பினராகக் தான் இருப்பதன் மூலம் பாராளுமன்றத்தில் ஒரு குழப்பத்தை உருவாக்கி அரசுக்கு உபத்திரத்தை ஏற்படுத்தலாம் என்பதே அவரின் முக்கிய நோக்கம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பாராளுமன்றத்தில் பியோனாக நியமித்தாலும் அவரே ஜனாதிபதியாக இருப்பார் என்று பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்ட விடயம் இங்கு நோக்குதற்குரியது.

அதாவது மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி என்ற பதவியில் இருந்தார் என்பதை விட, தன்னிடமுள்ள தனிப் பட்ட தடிப்பையும் அவர் தனக்கிருக்கக்கூடிய அதிகாரத்திற்கு மேலாகப் பயன்படுத்தினார்.

எனவே அவரின் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கடும் பயம் அடைந்தனர்.

எனினும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் தோற்றதன் காரணமாக, அந்தப் பயம் தணிவு பெற்றது. இருந்தும் அந்த நிலைமை நீடிக்க வாய்ப்பில்லாமல் போகும் அளவில் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதென்ற மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு அமைந்துள்ளது.

இந்த அறிவிப்பு மகிந்தவுடன் சேர்ந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரை விட்டு விலகி மைத்திரியின் அரசுக்கு ஆதரவு வழங்குவதைத் தடைசெய்யும்.

ஆக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக வருவது இந்த நாட்டின் எதிர்கால அமைதிக்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்தும் என்பதுடன் இனப் பிரச்சினைக்கான தீர்வையும் தடை செய்யும்.

எனவே தமிழ் – முஸ்லிம் மக்கள் சந்திரிகா குமார துங்கவை பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு தூண்ட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சந்திரிகா குமாரதுங்க பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடும் போது அதற்கு தமிழ் – முஸ்லிம் தரப்புக்கள் ஆதரவு தரும் என்ற உத்தரவாதத்தை வழங்கி சந்திரிகாவை அரசியலுக்கு அழைத்து வருவது கட்டாயமானதாகும்.

இதைச் செய்யாதவிடத்து மகிந்த ராஜபக்ஷவின் ஆதிக்கம் பாரளுமன்றத்தில் கோலோச்சும் என்பதுடன் ஒரு ஜனாதிபதியை போல அவர் அங்கு நடந்து கொள்வார் என்பதும் நிறுதிட்டம்.

இது ஜனநாயகத்துக்குப் பாதகமானது என்பதுடன் பாராளுமன்ற உறுப்பினராக மகிந்த ராஜபக்ஷ இருப்பாராயின் நம்பிக்கையில்லா பிரேணைகள் பாராளு மன்றத்தில் அடிக்கடி கொண்டுவரப்படும்.

எனவே இவற்றுக்கெல்லாம் முடிவுகட்ட வேண்டுமாயின் மகிந்தவை முறியடிக்கக்கூடிய நல்மருந்தாகிய சந்திரிகா குமாரதுங்கவை பிரதமராக்குவதே ஒரேவழி. இதைச் செய்வதில் தமிழ் – முஸ்லிம் அரசியல் தலைமைகள் தயங்கக் கூடாது.

# மகிந்தவுடன் மைத்திரி இணையவேமாட்டார்

## ஹரின் மீண்டும் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியல் ரீதியாக என்றும் இணைந்து செயற்படமாட்டார் என்பதில் தனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மீண்டும் தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அதேபோல், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடையில் இருக்கும் பிணைப்பு என்றும் உடையாது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு இலகுவாக பயணம் செய்யும் சந்தர்ப்பத்தை நாங்கள் அவருக்கு வழங்கியுள்ளோம். மகிந்த மீது நாங்கள் வைராக்கியம் கொள்ளவில்லை. நாங்கள் அவருக்கு வசதி வாய்ப்புகளை வழங்கினோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளை நாங்கள் அன்று எதிர்நோக்கினோம். மகிந்த ராஜபக்ஷவின் கூட்டங்களில் மக்கள் கூட்டத்தை காட்ட முடியும். எனினும் வாக்குகள் கிடைக்காது. மகிந்த ராஜபக்ஷ இனி என்றுமே வெற்றி பெற போவதில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குப்பை குவியலுக்குள் சிக்கி குப்பைக் கூடைக்குள் தலையை விட்டுக்கொள்ளும் தலைவர் அல்ல. மகிந்த ராஜபக்ஷ வாய் காரணமாக மீண்டும் ஏறப் போகிறார். அவர் அரசியல் சண்டியராக முயற்சித்து வருகிறார் எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (இ-7)

# இ.போ.ச.பேருந்துச்சேவை காரைநகரிலிருந்து துணுக்காய், பாண்டியன்குளம் வரை ஆரம்பிப்பு

(மல்லாவி)

துணுக்காய் மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளிலுள்ள அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் கடமையாற்றுவதற்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து சென்று வரும் பணியாளர்களின் வேண்டுகோளுக்கு அமையவும் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையையடுத்தும் தினசரி அதிகாலை 5.30 மணிக்கு காரைநகர் இ.போ.ச சாலையிலிருந்து பேருந்துகள் யாழ்ப்பாணம் சென்று துணுக்காய், பாண்டியன்குளம் வரையிலான போக்குவரத்து சேவையொன்றை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

மேற்படி இரு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள பாடசாலைகள் அரச திணைக்களங்கள் உட்பட தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுவதற்கென யாழ்.மாவட்டத்தில் இருந்து தினசரி நூற்றுக்கணக்கான அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்கள் சென்றுவருகின்றனர். இவர்கள் உரிய நேரத்திற்கு கடமைக்கு சமுகமளிக்க முடியாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதன் காரணமாக தமக்கான போக்குவரத்து சேவையினை ஆரம்பித்து தருமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இதற்கமைய முல்லை அரசாங்க அதிபர் வடபிராந்திய இ.போ.ச முகாமையாளருடன் தொடர்பு கொண்டதற்கு அமைய முகாமையாளரின் உத்தரவின் பேரில் காரைநகர் இ.போ.ச சாலையினால் பேருந்து சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவையானது அதிகாலை 5.30 மணிக்கு காரைநகரில் இருந்து ஆரம்பமாகி 85 ஆம் இலக்க வழித்தடம் ஊடாக சித்தன்கேணி, வட்டுக்கோட்டை வழியாக யாழ்ப்பாணத்தை காலை 6 மணிக்கு சென்று பின்னர் 6.20 மணிக்கு ஏ-9 வீதியூடாக பயணத்தை மேற்கொண்டு மாங்குளத்தை சென்றடைந்து அங்கிருந்து துணுக்காய் பாண்டியன் குளத்தை காலை 9.30 மணியளவில் சென்றடைகின்றது.

பின்னர் பிற்பகல் 4.15 மணிக்கு பாண்டியன்குளத்தில் இருந்து புறப்படுகின்ற குறித்த பேருந்து ஏற்கனவே பயணித்த வீதி வழியாக யாழ்ப்பாணத்தை மாலை 6.20 மணிக்கு வந்தடைந்து பின்னர் அங்கிருந்து காரைநகரை நோக்கி பயணிக்கின்றது.

இச் சேவையினை பொதுமக்களும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)



## சத்திய தரிசனம்

### மனச்சாட்சியை மதிப்போம்

❖ நல்லொழுக்கம், கட்டுப்பாடான வாழ்வு, உயிர்கள் மீது அன்பு ஆகியவற்றால் பெறும் மனநிறைவே சொர்க்கம்.


❖ குறுக்கு வழியில் பணம் தேடலாம். ஆனால், அது நிலைப்பதில்லை.

❖ எந்த வயதைச் சேர்ந்த பெண் என்றாலும், அவளைத் தாயாக மதிப்பவன் நல்ல மனிதன்.

❖ பிறந்த நாட்டையும், பெற்ற தாயையும் நேசியுங்கள். அவர்களுக்காகத் தியாகமும் செய்யுங்கள்.

❖ மனசாட்சி நமக்குள் இருந்து நம்மை வழிநடத்துகிறது.

❖ அன்றாட வழிபாட்டில் உலகிலுள்ள அனைவரும் நலமுடன் வாழ வேண்டும் என்று பிரார்த்தியுங்கள்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## சிவனும் சிவனின் அதிசய ஆபரணங்களும்

சந்திரன்: சிவனுக்கு அநேகப் பெயர்கள் உண்டு. சாதாரணமாக எல்லோராலும் கூறப்படுவது சோமன் அல்லது சோமசுந்தரர், சோமன் என்றால் சந்திரன் எனப்பொருள்படும். இதன் உள்ளார்ந்த பொருள் போதை சிவன் சந்திரனை ஒரு ஆபரணமாகப் பயன்படுத்துகிறான். ஏனெனில் ஒரு யோகி உள்ளே போதையுடன் எப்போதும் சுறுசுறுப்புடன் எச்சிரிக்கையுடன் இருக்கிறான். இந்தப் போதையை அனுபவிக்க நீ எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நீ குடித்திருந்தாலும் விழித்திருந்து போதையை அனுபவிக்க வேண்டும். (போதை என்பதை சாதாரணப் பொருளில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இது உள்ளிருந்து பெருகும் அமிர்தம்.)

யோகத்தினால் உடலின் உள்ளே போதை ஏற்பட்டாலும், மனம் நூறு சதவீதம் எச்சரிக்கையுடன் இருக்கும். கடந்த இருபது ஆண்டுகளாக ஆய்வு செய்த பிரபல விஞ்ஞானி, மூளையில் அநேக நரம்பு மண்டலங்கள் உள்ளன. உனது உடலை சில முறைகளில் வைத்துக் கொண்டால், உடல் ஒருவித போதையை உண்டாக்குகிறது: அதை மூளை ஏற்றுக்கொள்கிறது. இதைத்தான் மனித உடல் தனது போதையான அமைதி, சந்தோஷம், ஆனந்தம் ஆகியவை வெளியிலிருந்து ஏற்படாமல் உள்ளிருந்தே உண்டாவது என்கிறோம் என்கிறார்.

அந்த விஞ்ஞானி இந்த ரசாயனத்துக்கு ஒரு பெயர் கொடுக்க விரும்பினார் அதைத் தான் ஆனந்தம் சந்தோஷம் என்கிறார். அதைத்தான் ஆன்ந்தமிதே எனப் பெயரிட்டார். இதை நாமே தேவையான அளவு உருவாக்கினால், இதைப் பெரிதும் குடித்துக் கொண்டும், எப்போதும் விழித்துக் கொண்டும் இருப்போம்.

நாகம் (பாம்பு) பாம்புக்கு ஒரு சில விசேஷ சக்திகள் உள்ளன. சிவன் தனது கழுத்தில் பாம்பை அணிந்துள்ளான். இது ஒரு அடையாளம் மட்டுமல்ல இதற்குப் பின்னால் அநேக விஞ்ஞான உண்மைகள் உள்ளன. நமது உடலில் இவைகளில் ஒன்றான விஷ்த்தி சக்கரம் நமது தொண்டைக் குழியில் இருக்கிறது. இது பாம்புடன் அதிகத் தொடர்புடையது. விஷ்த்தி என்றால் விஷத்தை நீக்குதல்.

விஷ்த்தி என்றால், வடிகட்டுதல் நமது விஷ்த்தி சக்தி வாய்ந்ததாக இருந்தால் உனக்கு ஏற்படும் எல்லாவற்றையும் வடிகட்டுதல் நடைபெறும். சிவாவின் முக்கியமான சக்தி விஷ்த்தி அதனால் தான் அவனை விஷகண்டா அல்லது நீலகண்டா என்கிறோம். ஏனெனில் அவன் எல்லா விஷத்தையும் வடிகட்டுகிறான்.

விஷம் என்பது நாம் சாப்பிடுவதில் இருப்பது மட்டுமல்ல, இது அநேக வழிகளில் உள்ளே செல்கிறது. ஒரு கெட்ட எண்ணம், ஒரு கெட்ட உணர்வு, கெட்ட செயல், கெட்ட சக்தி ஆகியவை நம் வாழ்வை நாசப்படுத்தும்.

நமது விஷ்த்தி விழிப்புடன் இருந்தால் அது எல்லா சக்திகளையும் வடிகட்டி நம்மை கெட்ட சகவாசத்திலிருந்து காப்பாற்றும் விஷ்த்தி விழிப்புடன் இருந்தால் அவனைச் சுற்றி என்ன பாதிப்புகள் ஏற்பட்டாலும் அவை ஒன்றும் செய்ய முடியாது. அவன் ஒரு சக்தியுள்ள மனிதனாக இருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி; முதல் சுற்றில் பெடரர், நடால்

'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் மிக உயரியதான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது.

போட்டியின் 2-வது நாளான நேற்றுமுன்தினம் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் 7 முறை சம்பியனும், 2-ம் நிலை வீரருமான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-1, 6-3, 6-3 என்ற நேர் செட்டில் ஜூம் ஹரை (போஸ்னியா) 67 நிமிடங்களில் தோற்கடித்தார்.

ஸ்பெயினின் ரபெல் நடால் தனது முதலாவது சுற்றில் 6-4, 6-2, 6-4 என்ற நேர் செட்டில் பிரேசிலின் தாமஸ் பெல்லுச்சியையும், இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே 6-4, 7-6 (7-3), 6-4 என்ற நேர் செட கணக கில் கஜகஸ்தானின் குகுஷ்கினையும் வெளியேற்றினர்.

அதே நேரத்தில் பிரான்சின் முன்னணி வீரர் சோங்கா முதல் தடையை கடக்க ஏறக்குறைய 4 மணிநேரம் போராட வேண்டி இருந்தது.

5 செட் வரை நீடித்த திரிலிங்கான மோதலில் சோங்கா 7-6 (10-8), 6-7 (3-7), 6-4, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் ஜிலெஸ் முல்லரை (லக்சம்பர்க்) வீழ்த்தினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனும், தரவரிசையில் 2-வது இடம் வகிப்பவருமான பெட்ராகிவிடோவா (செக்குடியரசு), தன்னை எதிர்த்த 108-ம் நிலை வீராங்கனை நெதர்லாந்தின் கிகி பெர்டென்சை தோற்கடிக்க எடுத்துக் கொண்ட நேரம் வெறும் 35 நிமிடங்கள் தான். இதில் 6-1, 6-0 என்ற நேர் செட்டில் பெர்டென்சை பந்தாடினார்.

கடந்த வாரம் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த கிவிடோவா, அதில் இருந்து மீண்டு கொளுத்தும் வெயிலில் பட்டையை கிளப்பி இருக்கிறார். கிவிடோவா 2-வது சுற்றில் ஜப்பானின் குருமி நராவை எதிர்கொள்கிறார். இன்னொரு ஆட்டத்தில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் 6-0, 6-0 என்ற நேர் செட் கணக்கில் சக நாட்டவர் கரினா விததோப்டடை துவம்சம் செய்தார். எதிராளிக்கு ஒரு புள்ளி கூட விட்டுக் கொடுக்காமல் முழுமையாக வெற்றி பெறுவதற்கு 'டபுள்பாகல் என்று பெயர்.

இரண்டு நாட்களில் பதிவான 3-வது 'டபுள்பாகல்' இதுவாகும். ஏற்கெனவே வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), ஆண்ட்ரீயா பெட்கோவிச் (ஜேர்மனி) இதே போல் 'டபுள் பாகல்' வெற்றி செய்திருந்தனர். 3-ம் நிலை வீராங்கனை ருமேனியாவின் சிமோனா ஹலேப அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவர் 7-5, 4-6, 3-6 என்ற செட் கணக்கில் 106-ம் நிலை வீராங்கனை ஜனா செப்லோவாவிடம் (சுலோவக்கியா) வீழ்ந்தார். (க)



# கோபா அமெரிக்க காற்பந்து; இறுதிப்போட்டியில் ஆர்ஜென்டீனா



பராகுவேக்கு எதிரான கோபா அமெரிக்க காற்பந்து அரையிறுதி போட்டியில், ஆர்ஜென்டீனா 6-1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

44-வது கோபா அமெரிக்க கோப்பை காற்பந்து போட்டி சிலியில் நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே இதன் முதல் அரை இறுதி ஆட்டத்தில் பெரு அணியை தோற்கடித்து இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது சிலி. இந்நிலையில் இந்திய நேரப்படி நேற்று அதிகாலை நடந்த 2-வது அரை இறுதி ஆட்டத்தில் 14 முறை சம்பியனான ஆர்ஜென்டீனா 2 தடவை கோப்பையை வென்ற பராகுவே அணிகள் மோதின.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆர்ஜென்டீனா முதல் பாதி ஆட்டத்தின் பாதி நேரத்திலேயே 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

அந்த அணியின் கப்டன் மெஸ்ஸி அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் சக வீரர்கள் கோல் அடிக்க உதவினார்.

இறுதியில் ஆர்ஜென்டீனா 6-1 என்ற கோல் கணக்கில் பராகுவே அணியை தோற்கடித்து இறுதி போட்டிக்கு முன்னேறியது. (க)

# கராத்தே சுற்றுப்போட்டி

கனடா ஒன்ராரியோ மாநிலத்தின் கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் ரொரன்டோவில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட சோட்டோகான் கராத்தே அக்கடமி இன்ரநசனல் சிறிலங்கா (SHOTOKAN KARATE ACADEMY INTERNATIONAL SRI LANKA) கழகத்தின் பயிற்றுநர் அன்ரே டினேஸ் சிரேஷ்ட கறுப்புப்பட்டி வீரர்களுக்கான காட்டா (KATA) போட்டியில் தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

மேலும் இந்த போட்டியில் கராத்தே நடுவர் சம்மேளனத்தின் நடுவர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு மேற்படி போட்டியில் நடுவராகவும் கடமையாற்றியுள்ளார்.

படத்தில் அன்ரோ டினேஸ்டன் கராத்தே ஒன்ராரியோ சம்மேளன பிரதம நடுவர் சிகான் சுவாங்கோவினையும் காணலாம். (க)



## கணேஸ்வரியம் வெற்றிக்கிண்ணத்திற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது



இணுவில் கலையொளி மன்றத்தின் 50ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்படும் மாபெரும் துடுப்பாட்ட சுற்றுப்போட்டிக்கு கணேஸ்வரியம் வெற்றிக்கிண்ணம் 2015 விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

9 வீரர்கள் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றமாக இப்போட்டி நடைபெறும்.

வெற்றி பெறும் அணிக்கு முதலாவது பரிசுத் தொகையாக 20 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் இரண்டாவது வெற்றியாளருக்கு 10 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் இன்று வியாழக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். தொடர்புக்கு : 077 054 6574, 077 594 4827. (க)



வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இவ்வாண்டிற்கான கரப்பந்தாட்டப்போட்டியில் சம்பியனாகிய சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினரைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து பெருமைப்படுகிறது ஆஸியின் பிரட் ஹடின் கிண்டல்

நியூஸிலாந்து அணிக்கு எதிராக 'புதிய இங்கிலாந்து அணி' ஒருநாள் தொடரில் 3-2 என்று வெற்றி பெற்று, அது பற்றி பெருமையடித்து கொள்வது அவுஸ்திரேலிய வீரர்கள் மத்தியில் கேலிக்குள்ளாகியுள்ளது.

ஆஷஸ் தொடர் தொடங்குவதற்கு முன்பாக 'பரம்பரை வைரிகளான' அவுஸ்திரேலியா-இங்கிலாந்து வீரர்கள் இப்படிப்பட்ட சொற்போரில் ஈடுபடுவது வழக்கம் என்றாலும், மார்க்கெட்டிங் உத்தி என்றாலும் ஒரு அணி பெற்ற வெற்றியை கேலி பேசுவதென்பது இதுவரை இருந்ததில்லை. இப்போது இந்த புதிய டிரெண்டையும் அவுஸ்திரேலியா தொடங்கியுள்ளது.

பொதுவாக இங்கிலாந்து ஊடகங்கள், இந்திய ஊடகங்களைப் போலவே வெற்றிகளை அதற்குரிய தர நிலைகளிலிருந்து சற்று உயர்த்தி ஊதிப்பெருக்குவதும், தோற்றால் அப்படியே தரநிலைகளிலிருந்து தாழ்ந்து விமர்சனங்களில் காற்றைப் பிடுங்கி விடுவதும் நாம்பார்த்துப் பழகிய ஒன்றுதான்.

இந்நிலையில் டெஸ்ட் கேப்டன் அலிஸ்டர் குக், இங்கிலாந்து ஒருநாள் அணியின் புதிய உத்வேகத்தை டெஸ்ட் வீரர்களிடத்திலும் செலுத்துவேன் என்று கூறினாலும் கூறினார், 'உலக சாம்பியன்' அவுஸதிரேலியா சும்மா இருக்குமா? இதோ சில:

பிரட் ஹடின் கூறும்போது, ஒருநாள் தொடர் (இங்கி-நியூஸி ஒருநாள் தொடர்) வெற்றி பற்றிய அவர்களின் ஊதிப்பெருக்கலை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாங்கள் இப்போதுதான் உலகக்கோப்பையுடன் வந்துள்ளோம். அவர்களின் உற்சாகத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த வடிவத்தில் அவர்கள் படாதபாடு பட்டு கடைசியாகக் கண்டடைந்த போர்ம் குறித்து அவர்களது பெருமை எனக்கு புரியாத புதிராகவே உள்ளது. உலகக் கோப்பையில் அந்த அணி சரியாக ஆடவில்லை. இப்போதைய கொண்டாட்டம் அவர்களிடத்தில் 2 மாதங்கள் மகதாமதமாக வந்து சேர்ந்துள்ளது.


உலகக்கோப்பையில் எங்களுக்கு எதிராக முதல் போட்டியில் ஆடினர். அது தொடங்கியவுடன் அவர்களுக்கு நெருக்கடியும் தொடங்கி விட்டது.

இதற்கு முன்பாக அவர்கள் கிரிகெட்டை மகிழ்ச்சியுடன் ஆடவில்லையா என்ன? இந்தப் பெருமிதங்களெல்லாம் எங்கிருந்து வந்தன என்று தெரியவில்லை. ஒருவேளை நான் வெகுளியாக இருக்கலாம் என்றார்.

ஷேன் வோட்சன், இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரில் வழக்கத்துக்கு மாறாக ஆடியது, உண்மைதான்.

ஆனால், பாவம் அவர்களுக்கு இது 2 மாதங்கள் தாமதமாக கிடைத்துள்ளது. இன்னும் மூன்றரை ஆண்டுகள் அடுத்த உலகக் கோப்பைக்காக காத்திருக்க வேண்டும்.

இந்நிலையில் ஒருநாள் கிரிக்கெட் போலவே டெஸ்ட்டிலும் அவர்கள் புதிய பரிணாமம் பெறுவார்களா பார்க்கலாம். அதற்கு உண்மையில் திறமையான வீரர்கள் வேண்டும். அவர்கள் ஆட்டம் பரிணாமம் அடைந்துள்ளதா என்பதைப் பார்க்க ஆவலாக உள்ளது என்று கூறினார். (க)



# சுற்றுலாவில் சச்சின்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தனது குடும்பத்தோடு இத்தாலிக்கு சுற்றுலா சென்றுள்ளார். அங்கு ரோம் நகரில் தனது மனைவி அஞ்சலி, மகள் சாராவுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை பேஸ்ஃபுக்கில் பகிர்ந்து கொண்டார். (க)

# சங்கக்கார விலகல் உபுல் தரங்க இணைவு

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியில் சங்கக்கார இடம்பெறமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கக்கரா ஏற்கெனவே பாகிஸ்தானுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாட இருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபையிடம் தெரிவித்திருந்தார்.

அதன்படி, தனிப்பட்ட காரணத்திற்காக 3ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து விலகியுள்ளார். இவருக்கு பதிலாக உபுல் தரங்க அணியில் இணைந்துள்ளார்.

உபுல் தரங்க, இறுதியாக கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பங்கு பெற்றார்.

தற்போது இவர் மீதமுள்ள ஒரு டெஸ்ட் போட்டி, 5 ஒருநாள் போட்டித் தொடர் மற்றும் இருபது-20 போட்டி ஆகியவற்றில் விளையாடவுள்ளார்.

உபுல் தரங்க, 177 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 5343 ஓட்டங்களையும், 19 டெஸ்ட் போட்டி களில் 1019 ஓட்டங்களையும் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)




# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி வில்லியம்ஸ் ஜோடி விலகல்



பெண்கள் டென்னிஸ் போட்டிகளில் அசத்தி வருபவர்கள் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மற்றும் வீனஸ் வில்லியம்ஸ்.

சகோதரிகளான இவர்கள் இருவரும் பெண்கள் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் விளையாடி வருகிறார்கள். இரட்டையர் பிரிவில் இருவரும் சேர்ந்தே விளையாடுகிறார்கள்.

இந்நிலையில், தற்போது நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில், இந்த ஜோடி பெண்கள் இரட்டையர் பிரிவில் இருந்து விலகியுள்ளது. இதற்கான காரணம் என்ன என்று தெரிவிக்கப்படவில்லை.

இந்த ஜோடி இணைந்து 13 முக்கிய சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இதற்கு முன் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் இருந்தும் விலகியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றுக்குப்பின் வீனஸ் வில்லியம்ஸ் இதுகுறித்து கூறும்போது, நாங்கள் 2016-ம் ஆண்டு நடை பெற இருக்கும் ரியோ ஒலிம்பிக் போட்டியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு முன்னோட்டமாக சில போட்டிகளில் விளையாட முயற்சி செய்து வருகிறோம். இந்த நிலையில் இந்த மோசமான முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார். (க)

# சொகுசு பங்களா வாங்கிய கோலி

இந்திய கிரிக்கெட் அணியின் துணை அணித்தலைவர் விராட் ஹோலி, டில்லியில் ரூ.80 கோடிக்கு சொகுசு பங்களா ஒன்றை வாங்கியுள்ளார். விராட் கோஹ்லி கிரிக்கெட் வர்ரர்களில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் ஒருவராக இருக்கிறார். இவர் மேற்கு டெல்லியில் உள்ள பாஷிம் விஹாரில் 3 அறை கொண்ட வீட்டில் தனது தாய் மற்றும் அண்ணனுடன் வசித்து வருகிறார். அவருக்கு மீரா பாக் பகுதியிலும் வீடு உள்ளது.

இந்நிலையில் அதே பகுதியில் பஞ்சாபி பாக் என்ற இடத்தில் ரூபாய் 80 கோடி மதிப்புள்ள சொகுசு பங்களா ஒன்றை வாங்கியிருக்கிறார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில் போட்டியிடுவதாக...

அவர்களது விருப்பத்தை நான் புறக்கணிக்க மாட்டேன். அதற்கான உரிமை எனக்கு இல்லை. எனவே நாட்டையும் கட்சியையும் பாதுகாக்க அனைத்து மக்களும் 2015இல் எம்மோடு கைகோர்க்குமாறு அழைப்பு விடுக்கிறேன்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் நாட்டின் பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு எங்களோடு இணைநது கொள்ள வேண்டும். எமது ஆட்சி காலத்தில் குரோதம், பழிவாங்கல் போன்றவை குப்பையில் போடப்பட்ட நிலையில்தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அதனை மீண்டும் எடுத்து செயற்படுத்தி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி 1989, 1990 காலத்தில் செய்த அநியாயங்களை மறக்க முடியாது. புலிகள் அமைப்புடன் 11 வருடங்களுக்கு முன்னர் செய்து கொண்ட நாட்டை காட்டிக் கொடுக்கும் ஒப்பந்தத்தை மறக்க முடியாது.

ஜனவரி 9ஆம் திகதி மக்கள் ஆணையை மதித்து நான் விலகிச் சென்ற விதம் இலங்கை அரசியல் வரலாற்றுக்கு ஒரு முன்னுதாரணம். இதை சர்வதேச நாடுகளும் கண்டு அதிர்ச்சி அடைந்தன. எனது ஆட்சி காலத்தில் விமான நிலைய துறை முக திறப்பு, அதிவேக வீதி திறப்பு என அபிவிருத்தி செய்திகளுக்கு பஞ்சமிருக்கவில்லை.

ஆனால் தற்போதைய அரசு தனது திட்டங்களை பாதை மாற்றி திறந்து வைக்கிறது. எனது ஆட்சி காலத்தில் நடந்த அபிவிருத்தியை பார்த்து இலங்கை மக்கள் பெருமை கொண்டனர். வெளிநாடு சென்றவர்கள் மீண்டும் திரும்பி வந்தனர்.

கொழும்பு நகர் துரித அபிவிருத்தி நகராக அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்றைய அரசு அனைத்தையும் தங்கள் திட்டம் என கூற முனைகிறது.

பயங்கரவாதிகளுக்கு அமைச்சரவை ஒப்புதலில் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கு அமைச்சரவையில் ஒப்புதல் கிடைத்திருந்ததால் உலகத்தில் அதைவிட வெட்கம் வேறு எதுவும் இல்லை.

தற்போதைய அரசினால் 100 நாட்களில் 27 எத்தனோல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. 5400 கோடி மத்திய வங்கி பிணை முறி மோசடி இடம் பெற்றுள்ளது.

எனவே இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் தேசிய பாதுகாப்பு அபிவிருத்தியை மையமாக வைத்து தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர், மலே ஆகிய அனைத்து இன மக்களும் ஓர் இனமாகச் சேர்ந்து நாட்டை கட்டியெழுப்ப நாட்டின் தேசிய கொடியை தலைநிமிரச் செய்ய எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவேன். அதற்கு அனைவரும் எங்கள் அணியுடன் இணைந்து கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (செ-11)

## மகிந்தவை...

இந்தநிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து குற்றம் சுமத்தப்படாத வேட்பாளர்களை பெயரிடுவதன் மூலம் தேர்தலில் வெற்றி பெறமுடியும் என்று மகிந்த எதிர்ப்பாளர்கள் நம்புகின்றனர்.

இதற்கு உதாரணமாக மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தப்பட்டுள்ள தமது பழைய சகாக்களுடன் வந்தால், அவருக்கு ஆதரவு கிடைக்காது என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலியே ரத்தன தேரர் தெரிவித்துள்ளமையை ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-11)

## காணாமல் போனோர்...

யில், ஜெனிவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வின் போது இடம் பெறவுள்ள இலங்கை தொடர்பிலான விவாதத்தின் போது அரசாங்கத் தரப்பில் அளிக்கப்படவுள்ள விளக்கங்களில் இவை இடம்பெறும்.

இலங்கையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உணர்ந்துள்ளது. இப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என நாங்கள் விரும்புகின்ற போதிலும், பல சிக்கல்கள் உள்ளதாலேயே இத்தகைய தகவல்களை உடனடியாக அரசாங்கத்தால் வெளியிட முடியாமல் உள்ளது.

காணாமல்போனவர்கள் மற்றும் படைத்தரப்பினரிடம் சரணடைந்தவர்களின் உறவினர்களின் எதிர்பார்ப்பு மற்றும் ஏக்கங்கள் நியாயமானவையே என்பதை இலங்கை அரசாங்கம் முற்றாக அறிந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் படைத்தரப்பினரிடம் சரணடைந்த வர்கள் குறித்து மாறுபட்டத் தகவல்களும் உள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக குழுவின் செப்ரெம்பர் மாத அமர்வில இடம்பெறவுள்ள இலங்கை தொடர்பிலான விவாதத்தின் போது இத்தகைய விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் சில தகவல்களை வெளியிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தற்போது 250க்கும் குறைவான முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே உள்ளதாகவும் குறிப்பிட்ட அஜித் பெரேரா, அவர்கள் தொடர்பான விபரங்கள் நீதியமைச்சிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (செ-11)

## அன்றே சிறையில் அடை...

அமைதியாக இருக்க இடமளித்துள்ளோம். அப்படி இருந்தால் பிரச்சினை இல்லை.

அப்படியானவர்களுக்கு மீண்டும் அதிகாரத்தை கொடுக்க நினைப்பது மக்களின் எதிர்பார்ப்புக்களை தூக்கி நிலத்தில் அடிப்பதற்கு ஒப்பாகும்.

எவ்வளவு பெரிய நபராக இருந்தாலும் தவறு செய்தால் சிறை செல்ல வேண்டும். வீடு சென்று வாயை மூடிக் கொண்டு இருக்கவும் வேண்டும்.

அரசியல் தலைவர் ஒருவரிடம் இருக்க வேண்டிய முக்கிய பண்பு அது. அதைவிடுத்து தினமும் இதில் தொங்கிக் கொண்டு அட்டை போல இரத்தம் குடிப்பதற்கு இடமளிக்கமுடியாது.

மக்களின் வாக்கினால் தேர்தலில் தோற்றால் வீட்டில் இருக்க வேண்டும். அதுதான் ஜனநாயகப் பண்பு. மக்கள் அரசியல் என்பது அதுதான். இலங்கை ஹிட்லர்தேசம் அல்ல. கொலை செய்து கொண்டு, ஊழல் செய்து கொண்டு இருக்க முடியாது. அதனால்தான் 9 வருட குறுகிய காலத்தில் மக்கள் அணிதிரண்டு வீட்டுக்கு விரட்டி அடித்தனர்.

பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை பாதுகாப்பது மக்களின் பொறுப்பு. அதற்கென மக்களுடன் சேர்ந்து எந்தவொரு போராட்டத்திற்கும் நாம் தயார். நாம் போராட்டத்தில் இறங்குவது பயம் என்ற ஒன்றை அருகில் வைத்துக் கொண்டு அல்ல.

ஆனால் எம்மால் இதனை தனியாக செய்ய முடியாது. இலங்கையை பெறுமதியான மக்கள் வாழும் நாடாக மாற்றி அமைக்க வேண்டும்.

எமது உயிர்களிற்கு ஆபத்துள்ள போதிலும், நாட்டிற்காக நாங்கள் எந்த மோதலிலும் ஈடுபடுவோம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். (செ-11)

## மகிந்த ராஜபக்ஷவுக்கு எதி...

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவார் என இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுமாறு அவரை நாட்டு மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஆனால, அரசியலில் இருந்து ஓய்வுபெற்ற அவர், அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால், கடந்த ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியுற்றவர் அந்தப் பதவிக்கு உரிமை கோரும் போது, நாட்டின் தோற்கடிக்கப்படாத தலைவரான சந்திரிகா குமாரதுங்க அதே பதவியை கட்சியிடம் கோருவதற்கு உரிமையுள்ளது.

இக்கட்சி அவரது தந்தையால் உருவாக்கப்பட்ட கட்சி. எனவே அவர் நிச்சயம் போட்டியிடுவார். இது தொடர்பில் இரண்டு மூன்று நாட்களில் அவர் தனது முடிவை அறிவிப்பார் என்று இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## இரண்டாம்...

களும் ஓகஸ்ட் 31ஆம் திகதியுடன் 3 ஆம் தவணைக்காக ஆரம்பிக்கப்படும் என்றும் பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலைகள் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (செ-11)

## த.தே.ம முன்னணி...

சபையின் தேர்தலை தாங்கள் புறக்கணித்ததாக கஜேந்திரன் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈபிடிபி கட்சிகள் இன்னாள் மற்றும் முன்னாள் அரசில் பங்காளிகளாக இருந்த காரணத்தால் அப்படியான கட்சிகளுடன் தாங்கள் கூட்டணி வைக்கவிரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் பிரதேசம், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வு, வாழ்வாதார மேம்பாடுகள் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடும் எனவும் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார். (செ-11)




### ஸ்ரீராம் வில்லிசைக்குழு

ஆலய விழாக்களிலும் பொது நிகழ்வுகளிலும்
சிரித்து மகிழ்ந்திட அழையுங்கள்

ஸ்ரீராம் வில்லிசைக்குழு
யாழ்ப்பாணம் T.P : 0777550203

(996)

### தென்னிந்திய யாத்திரை

பாடசாலை விடுமுறையை அனுசரித்து நடைபெறும் யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஊடான யாத்திரை

நாட்கள் 16 யாத்திரிகர் 10 ஆரம்பம் 10.08.2015

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத்தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல்மருவத்தூர், பொற்கோவில், மதுரைமீனாட்சி, குருவாயூர், மைசூர் சாமுண்டேஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமரி, ஸ்ரீரெங்கம், பிரம்மாகோவில் உட்பட 65க்கும் அதிக ஆலயங்களை தரிசிக்கலாம்.

*பெற்றுக் கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்:*

(இரு வழி விமான ரிக்கட், மூன்று வேளை உணவு, குடிநீர், தரமான தங்குமிடம், AC வாகன வசதி எயார் போட் போக வர வாகன வசதி, 60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட) மேல் விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு:-
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன்
0777680102, 0777362154

(C-1378)

### யாழ் மதர் கெயார் Dental Unit



Reg.No.#PV85754



நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல சேவைகள்.





- பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு, பல் வெண்மையாக்கல்)
- பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
- பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 221 9595, 021 221 9797, Mob : 077 220 2769

(C-1460)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப் பட்ட CERTIFICATES & INTER NATIONAL DIPLOMASI வழங்குகிறோம். மொழிபெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் யுகு இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND, BELGIUM..., செல்கிறார்கள்.

வகுப்பு ஆரம்பம் விரைவில். முற்கூட்டியே பதிவுசெய்யுங்கள்
021 222 8093 61இ கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → றக்கா றோட் → AF

(990)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org